# "பொன் விலங்கு"

TIRUNELVELI.

C. N. அண்ணாதுரை
காஞ்சி கல்யாணசுந்தரன்

மறுமலர்ச்சிப் பதிப்பகம்
காஞ்சிபுரம்

M. I. P. PROJECT
Microfilmed.
பதிப்புரிமை
நவம்பர் 1953.

4198

76029

விலை 1-0-0

Printed at The Rayan Press, Madras-1.

விற்பனையாளர்

முரசொலிப் பதிப்பகம்

131. பிராட்வே

சென்னை. 1

TIRUNELVELI

# திறவுகோல்

சிலரே படிக்கலாம், சிலருக்கே படிப்பு வரும், சிலருக்கே படிக்க உரிமை உண்டு!

சிலரே நாடாளலாம், சிலரே போர்வீரராகலாம், சிலருக்கே இந்தக் குணம் உண்டு!

சிலரே வியாபாரம் செய்யலாம், சிலரே பொருள் ஈட்டலாம், சிலருக்கே, இது சொந்தம்!

பெரும்பாலோர் உடலால் உழைக்கவேண்டும், கண்ணெனத் தகும் எண்ணும் எழுத்தும் கற்றல் கூடாது, கற்றாலும் வராது, கற்க நினைத்தாலும்—முயற்சித்தாலும் பாபமாகும்—மகத்தான துரோகம்—சமூக விரோத காரியம்—ஆண்டவன் அமைப்பை அழிக்க முனையும் நாத்திகம்!

இப்படி ஒரு ஏற்பாடு—அதுவும் சமுதாய ஏற்பாடு. ஆரியமுறை—சநாதனம்—வருணாஸ்ரமம்—பார்ப்பனீயம்—ஆகிய அனைத்தும் இதற்குள்ள ஒரே பொருள் தரும் பல சொற்கள்!

இது திராவிட சமுதாயக் கண்ணோட்டத்துக்கு மாறுபட்டது—முரண்பட்டது—விரோதப்பட்டது! ஆண்டி அரசனாகலாம்—அரசன் ஆசிரியனாகலாம்—பொற்கொல்லன் மகன் ஏர் உழும் உத்தமனாகலாம், வில்லேருழவர் சொல்லேருழவர் ஆகலாம். திரும்பவும் இவர்கள், அவர்கள் தொழிலை மேற்கொள்ளலாம்!

M. I. P. PROJECT
Microfilmed.



பிறப்பின் காரணமாக, இறக்கும் வரை என்றென்றும், இறந்த பிறகும், உயர்வு தாழ்வு பேசி சமூகத்தைப் பல கூறுகளாக்கி, ஒன்றோடொன்று கலக்கவிடாமல், ஒட்டவிடாமல், வெட்டி வைத்துப் பிளவு படுத்தி, சிதறிக்கிடக்கச் செய்வது என்பது திராவிடர் கலாச்சார மல்ல—மூக்காலு மல்ல. அகச்சான்று புறச்சான்று எல்லாம் இந்தக் கோட்பாட்டிற்கு உண்டு அரணாக!

ஆரிய கலாசாரத்தின் ஆணிவேர், அந்த அனர்த்தம்' அழிவின் மறு தோற்றம்! எல்லா நலன்களும் சிலருக்கு—நிலையான கேடு பலருக்கு! சிலருக்கு வாழ்வு உருசி—மற்ற அனைவருக்கும் வாழ்வு கூளுக்கும் தாங்கமுடியாதப் பெருஞ் சுமை! அந்தச் சிலர், சமுதாய விரோதமான இழி செயல்களை மேற்கொள்ளலாம், இழிவு அவர்களை அண்டாது! இப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது அதற்கான 'அற' நூல்களில்! மற்றவர், இப்படி நடத்தல் கூடாது—நடக்க நினைத்தல் கூடாது — அந்த அறநூல் அறுதியிட்டுக் கூறுகிறது ஐயத்திற்கு இடம் வைக்காமல்—இரண்டு அருத்தப் படுத்தும் சிக்கலில் தள்ளாமல்!

சிலர், செய்யும் கொடுஞ்செயல்கள் தருமம் கொலை—தருமம், களவு—தருமம், காமம்—தருமம்; அவைகளையே பலர் மேற்கொள்ளுவது சாஸ்திர விரோதம்—சண்டாளம்—கடுமையாக தண்டிக்கப்பட வேண்டிய தீயச் செயல்கள்! அதே சாஸ்திரம், இரட்டை நாக்குக் கொண்டு 'அறநெறி' பேசுகிறது—இல்லை—பிதற்றுகிறது!

இது பழங்கதை! நூல் வடிவிலே—அதுவும்—'அறநெறி'ச் சுவடி என்ற போர்வையிலே, இன்றும் பூஜைக்கும், புகழ்ந்தேத்தலுக்கும் உரிய பக்குவம் நிரம்பிய நூல்களாக,

31/10



நாட்டில் நடமாடிக்கொண்டு இருக்கின்றன. நூலாக மட்டுமல்ல, படித்தவர் பாமரர் முதலிய பலரோர் நாவிலும், நடைமுறை நினைப்பிலும் செயலிலும், இன்றும், அந்த அக்கிரம ஏடுகளின் ஆதிக்கம் பேயாட்டம் ஆடிக்கொண்டு தான் இருக்கிறது!

காலமாறுதலின் தாக்குதல், அந்த மனித விரோத நச்சுக் கொள்கையின் செயல் புரியும் வெகத்தையும், தன்மையையுந்தான், மாற்ற முயற்சித்திருக்கிறதே யல்லாது, அடியோடு அடையாளம் தெரியமுடியாத நிலையில் அழித்து ஒழித்து விடவில்லை. அடிப்படை அதுவேதான்—உருவம் வேறு! தசாவதாரத்தின் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டிய புதிய ருபம்—அதுவும் கோர சொருபம்!

அது, எது? விளக்கம், நீங்கள் படிக்க இருக்கும் இரு கட்டுரைகளும். விரிவு தேவை இல்லை! போதுமானது, அக்கட்டுரைகளிலேயே உள்ளது!

'வந்தது விபத்து' என்று பெயரிட்டு நூல் வடிவு கொண்ட இரு கட்டுரைகளையும், அந்தக் காலக் கட்டத்திற் கேற்பப் பெயரிடப் பட்டது, காலமாறுதல், 'பொன் விலங்கு' என்று அதே கட்டுரைகளுக்குப் பெயரிடத் தூண்டியது. பொறுத்திடுக! சீற்றம் நீங்குக!

வணக்கம்

**பதிப்பகத்தார்.**

# ஏ ! பிராமணர்களே !

"உங்கள் பரம்பரை வரலாறு குறித்து நான் என்ன நினைப்பது!

"ஏ ! பிராமணர்களே ! பரம்பரை உரிமை யென்ற காரணத்தால், 'பறையர்' களைவிட படிப்பதற்கு உங்களுக்கு அதிகத்திறமையிருந்தால், பிராமணர்களின் படிப்புக்காக அதிகப் பணத்தைச் செலவழிக்காதீர்கள். 'பறையர், களின் கல்விக்காக எல்லாவற்றையும் செலவு செய்யுங்கள்.

வளவற்றவர்களுக்குக் கொடுங்கள் ஏனெனில் அவர்களுக்கே உதவி தேவை. "பிராமணர்கள், பிறவியிலேயே புத்திசாலியானால் பிறர் உதவியில்லாமல் தானுகவே கற்றுக்கொள்ள முடியும். "மற்றவர்கள் பிறவியிலேயே திறமை யற்றவர்களானால், அவர்களுக்குத் தேவையான படிப்பும், ஆசிரியர்களும் பள்ளிக்கூடங்களும் அவர்களுக்கே விட்டு விடுங்கள். நானறிந்த மட்டில், இதுதான் நியாயமும் பகுத்தறிவுமாகும்'

——சுவாமி விவேகானந்தா.

# பொன் விலங்கு

## (சி. என். அண்ணதுரை)

—(::)—

திராவிடருக்கு மகத்தான சோதனைக் காலம் பிறந்து விட்டது.

திராவிடச் சமுதாயத்துக்கு, அதன் ஆதிநாள் தலைவர்கள் அரும்பாடுபட்டுப் பெற்றுத் தந்த கருஊலம் பறி போய்விட்டது.

பன்னெடும் நூற்றாண்டுகளுக்கு முன்பு புகுத்தப் பட்டுவிட்ட மனுவின் சமூகச் சட்டத்தின் பலனாக, திராவிடச் சமுதாயம், தாழ்நிலை அடைந்து, சகல துறைகளிலும், ஆதிக்கக்காரரின் ஏவலராகி, கையில் ஊமையராகிக் கிடந்தது கண்டு, நாடாண்ட மக்கள், கடலை அடக்கிய மக்கள், முத்தமிழ் வளர்த்த மக்கள், வீரபுரியில் வாழ்ந்த மக்கள், வீணரின் விபரீதச் சூழ்ச்சியில் சிக்கி, ஜாதிமுறை எனும் படுகுழியில் தள்ளப்பட்டது காரணமாக, தன்னம்பிக்கை கெட்டு, தன்மானம் பறிக்கப்பட்டு, அறிவுக் கண்ணை இழந்து கிடப்பது கண்டு

மனம் கலங்கி, மாபெரும் தலைவர்கள், சிந்தித்துச் சிந்தித்து, வீழ்ச்சியுற்ற சமூகத்தை எழுச்சிபெறச் செய்யும் அரியதோர் திட்டத்தைத் தீட்டினர்—நாட்டிலேயும் நடைமுறையிலே அது கொண்டு வரப்பட்டு, கோரிய பலனைக் கொடுத்தவண்ணம் இருந்தது. அந்தத் திட்டம் தகர்க்கப்பட்டுவிட்டது.

**கம்யூனல் ஜி. ஓ.—வகுப்புவாரி முறை** புதிய இந்திய அரசியல் சட்டப்படி செல்லுபடியாகாது என்று இரு மாணவர் சார்பாக, அரசியல் சட்டத்தைத் தீட்டியவர்களில் முன்னணியினராக இருந்த அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும், வி. வி. சீனுவாச ஐயங்கார் எனும் வக்கீலும் நடத்திய வழக்கிலே, சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதிகள், தீர்ப்பளித்துவிட்டனர்.

கம்யூனல் ஜி. ஓ.—சென்னை மாகாணத்துச் சமூக அமைப்பைக் கவனித்து இங்கு சமூக நீதி வழங்கப்படுவதற்காக வகுக்கப்பட்ட சட்டம்.

புதிய இந்திய அரசியல் திட்டம், வெள்ளையன் வெளியேறினதால் ஆட்சிப் பீடத்தமர்ந்த காங்கிரஸ் சர்வாதிகாரிகள் தீட்டிய சட்டம்—டெல்லியில்.

அந்த டெல்லி சட்டத்தின்படி சென்னை சர்க்காரின் திட்டம், சட்ட விரோதமானது என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

நீதிபதிகள் மூவர்—முதல்வர், ராஜமன்னார்-மற்றவர், விசுவநாத சாஸ்திரியார், சோமசுந்தரம் ஆகியோராவர்.

இந்த மூவர் அளித்த தீர்ப்பு, சட்ட சம்பந்த மானது.

அவர்களின் பொறுப்பும், கடமையும் அது. அது குறித்து, நாம் ஏதும் கூறுவது கூடாது-தேவையுமில்லை.

எட்டும் எட்டும் பத்து என்ற கணக்கு முறையை ஏற்றுக் கொண்டுதான் தீரவேண்டும் என்றால், நாலும் நாலும் எட்டு என்ற உண்மையை நிலைநாட்ட முடியாது.

ரூபாய்க்கு 12 அணாதான் என்பதை ஏற்றுக் கொண்டு விட்டால், அரை ரூபாய்க்கு ஆறணாதான் பெற்றுக் கொண்டாக வேண்டும்.

அதன்படி, இந்தியாவை ஒரே நாடு என்று கருதி, அதிகாரத்தை மத்திய சர்க்காரில் குவித்து வைத்துக் கொண்டு, மாகாண சர்க்கார்களைச் சாதாரண பஞ்சாயத்து போர்டு நிலைமைக்குக் கொண்டுவந்தான பிறகு, சென்னை சர்க்காரின் கம்யூனல் ஜி. ஓ. வை, சட்ட விரோதம் என்று சொல்லும் அதிகாரம், சட்டப்படி எடுபட்டுவிட்டது.

இந்தப் புதிய சட்டத்தின்படிதான், பாடு பட்டுப் பெற்ற, பலன் தரும் கம்யூனல் ஜி. ஓ.—கல்லறைக்கு இழுத்துச் செல்லப்படுகிறது.

கண்ணீர் ஆறு ஓடுகிறது நாட்டிலே-ஆனால் சட்டம் பேசுகிறது—கண்டிப்புடன்.

டில்லி, சென்னையை இப்படித்தான் ஆட்டி வைக்கும் என்று சொன்னபோது, கண் சிமிட்டி உதட்டை அசைத்

தவர்களின் முகத்திலெல்லாம் அசடு வழியும் படியாகத் தீர்ப்புக் கிடைத்து விட்டது.

பார்ப்பனச் சமுதாயத்திலே, வகுப்பு ஆதிக்க வெறிக்குணம் கொண்டவர்களின் பிடிவாதம், வெற்றி பெற்று விட்டது. பிராமண மாநாடுகளின் தீர்மானப் படி நிலைமை இன்று, வகுப்பு ஆதிக்கக்காரர் கொட்ட மடிக்கும்படி ஆகிவிட்டது. இந்துவும், மித்திரனும், தினமணியும் மற்றும் பல வகுப்புவாத இதழ்களும், பல ஆண்டுகளாகச் செய்துவந்த முயற்சி, முடிவடைந்து, வகுப்பு நீதிக்காகப் போராடி, வாதாடியவர்களின் மூக்கு அறுபட்டுவிட்டது.

எதிர்காலம்—பயங்கரமானதாகி விட்டது.

இடருள்ள வழி,-இருட்டு நேரம்-விளக்கு அணைந்து விட்டது—இதுவே இன்று ஏற்பட்டுள்ள நிலைமை.

சென்னை சர்க்காருக்குத் தோல்வி—திராவிடச் சமுதாயத்துக்கு மானக்கேடான தோல்வி-பார்ப்பனரைத் தூற்றுதே, என்று சமரசம் பேசிய சற்குணவான்களுக்கு, வெட்கம்.

..........அன்று, தியாகரின் கல்லறைமீது, கேலியும் கண்டனமும் சென்று தாக்கிவிட்டன.

பட்ட பாடு வீணாகி விட்டது—இனி 'திறமை' என்ற பெயர் கூறிக்கொண்டு ஆதிக்க வகுப்பினர், தமது பிடியைப் பலப்படுத்திக் கொள்வர்.

வெள்ளுடை வேந்தன் வீரத்தியாகராயர், திரா விடச் சமுதாயத்துக்காகத் துவக்கிய சம உரிமைப் போரிலே, பல வெற்றிகளைக் கண்ட சமுதாயம், இன்று, இரத்தக் கண்ணீர் விடக்கூடிய விதமான வேதனை தரும் தோல்வியைக் கண்டு விட்டது.

சட்டம், திட்டமாகக் கூறுகிறது, 'ஜாதி' காரண மாக, யாரையும், கல்வித் துறையிலே அனுமதிக்க மறுக்கக் கூடாது என்று.

இது, பரந்த நோக்கமாம்—ஜனநாயகப் பண்பாம்—புதிய இந்தியாவின் இலட்சணமாம்—இராமராஜ்யக் கோட்பாடாம்!

இதன் விளைவு என்ன ஆகும் என்று எண்ணும் போதே நேர்மையாளர்களின் நெஞ்சம் நடுக்கமெடுக் கிறது.

கம்யூனல் ஜீ. ஓ.—ரத்தாகி விட்டது—இனி பார்ப் பன மாணவர் இவ்வளவு எண்ணிக்கைதான் கல்லூரி களில் சேர்க்கப்படுவர், என்ற முறை இராது, 'மார்க்கு' என்னும் தகுதியைக் கவனித்து யாரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இதன்படி, கல்வி நிலையங்களிலே, ஒரே வகுப்பு—பார்ப்பன வகுப்பு நிரம்பிவிடும்—மற்ற வகுப்பார் ஜாதீய முறையினால் பின்னணிக்குத் தள்ளப்பட்ட வகுப்பினர் 'மார்க்' அந்த அளவுக்குப் பெறவில்லை என்ற காரணத்துக் காகக் கல்லூரியில் இடம் கிடைக்காமல், வெளியே வாட வேண்டும்.

"அவர்களுக்கு என்ன ஐயா, குறை! கம்யூனல் ஜி.ஓ. —இருக்கவே இருக்கிறது, கைதூக்கி விட" என்று பொறுமையுடன் பொச்சரிப்புடன் பேசிவந்தோருக்கு அகமும் முகமும் அன்றலர்ந்த செந்தாமரையாகி விட்டது, விழா நாள், வகுப்பு ஆதிக்கக்காரருக்கு-வேதனை தரும் நாள், திராவிடப் பெருங்குடி மக்களுக்கு.

"பையன், என்ன செய்கிறான்?"—நண்பர் கேட்கிறார்-" B.A., வகுப்பில் சேர்ந்திருக்கிறான்" தகப்பனார் கூறுகிறார் பூரிப்புடன். அவருடைய குடும்பத்திலேயே முதல் B. A., அரும்புகிறது—இது கம்யூனல் ஜீ. ஓ—வின்பலன்.

இனி, 'என்ன செய்கிறான்?' என்ற கேள்விக்கு, டிராம் ஓட்டுகிறான், துறைமுகத்தில் 'மேஸ்திரி'யாக வேலை பார்க்கிறான், கல்லூரியில் சேரவில்லை—இவனைவிட அதிக மார்க்கு வாங்கிவிட்ட 'பிராமணப்பையன்' சேர்ந்து விட்டான்—என்று தகப்பனார் கூறுவார்.

அடுத்த ஆண்டு பள்ளிகள் துவக்கத்தின்போது, திராவிடக் குடும்பங்களிலே, ஏற்பட இருக்கும் திகைப்பை முன் கூட்டி எண்ணினாலே, நெஞ்சு 'பகீர்' என்கிறது.

வந்தது விபத்து! அழிந்தது சமூகநீதி!

மிகமிகச் சிறுபான்மையினரான பார்ப்பனர்களைப் பற்றி வீணாகப் பிரமாதப்படுத்திப் பேசுகிறாயே, பேயனே! பித்தனே!—என்று நம்மைக் கேலி பேசி, 153-ம் செக்ஷன் கொண்டு தாக்கி, 'தேசபக்தர்' இந்தி

யர்'—என்ற பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்டுள்ளவர்களைக் கேட்கிறேம்—பார்த்தீரா! மாகாணத்திலே முப்பது ஆண்டுகளாக இருந்துவரும் முறை—பலப்பல மந்திரிகளால் ஆதரிக்கப்பட்ட முறை—காங்கிரஸ் மந்திரிகளாலும் ஆதரிக்கப்பட்ட முறை—சட்டசபையிலே வெற்றிக்கொடி நாட்டிய முறை—இதோ அந்தச் சிறு வகுப்பினரே உள்ள சுயநலக்காரரின் வேலையினுல் வீழ்ந்துவிட்டது! இப்போது என்ன சொல்கிறுர்கள், சமரசவாதிகள்—எண்ணிக்கையை மட்டும் எண்ணிக்கொண்டு, யார் நம்மை என்ன செய்யமுடியும் என்று இறுமாந்து கிடந்த ஏமாளிகள்! இதோ, கம்யூனல் ஜி. ஓ. சட்டவிரோதம் என்று தீர்ப்பாகிவிட்டது.

பின்னணியில் இருக்கிறது—சூழ்நிலை கெட்டுக்கிடக்கிறது—ஆகவேதான், அந்தச் சமூகத்துக்குச் சில சலுகைகள் காட்டுவது நியாயம், என்று பேசினர் அமைச்சர்கள்—சட்டமோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது, கம்யூனல் ஜி. ஓ.—சட்டவிரோதம் என்று கூறிவிட்டது.

சட்டப்படி செய்யக்கூடியவை, செய்யவேண்டியதைச் செய்துவிட்டனர் நீதிபதிகள்.

இதன் பயனுக—இந்தத் தீர்ப்பைச் சாதகமாகக் கொண்டு, வகுப்பு ஆதிக்கக்காரர்கள், சமூக நீதியை அழித்து, சிறுபான்மையினரின் சர்வ ஆதிபத்யத்தை நிலைநாட்டப் போகிறுர்கள். பழைய நிலை—பார்ப்பன ஆதிக்கம்—இதோ வந்து கொண்டிருக்கிறது.

இந்நாட்டிலே உள்ளதுபோன்ற கொடுமையான சமூக அமைப்பு வேறு எங்கும் கிடையாது.

இங்கு 'ஜாதிமுறை' மக்களைச் சின்னாபின்னமாக்கி, சிறுபான்மையினரை, ஆதிக்கக்காரர் ஆக்கிவிட்டது.

மேனாடுகளிலே ஒரு சிறுபான்மைக் கட்சி, பலாத்காரத்தின்மூலம், சர்வாதிகாரம் செலுத்துவது உண்டு— சிலகாலம். பிறகோ, சரியும், ஜனநாயகத்தின் தாக்குதலால்.

இங்கோ, பழைய ஏடு, மூடநம்பிக்கை எனும் ஆயுதங்களைக்கொண்டு, பெரும்பான்மைச் சமூகத்தை வீழ்ச்சி அடையச் செய்துவிட்டுச் சிறுபான்மை வகுப்பு, சர்வாதிகாரம் செய்கிறது.

இந்தக் கொடுமையை அடக்கி ஒடுக்கிவைத்தனர் நம் தலைவர்கள். டில்லிச் சட்டம் கட்டுண்டு கிடந்த இக் கொடுமையின் தளையை அறுத்துவிட்டு, 'போ! போ! உன் பசிதீர இரைதேடிக் கொள்'—என்று கூறிவிட்டது.

பார்ப்பனரல்லாதார் சமுதாயம், இனி என்ன செய்வது என்ற கேள்வியே, பொறுப்புள்ளவர்களின் விழி கூறும் மொழி! வகுப்பு ஏதேச்சதிகாரம் வெற்றி பெற்றுவிட்டால், பெரும்பான்மைச் சமூகம் சகல முனைகளிலும், அடிமை நிலையை அடையும், சமூகத்தின் கட்டுக் கோப்பிலே, ஒரு பயங்கரமான 'விரிச்சல்' ஏற்பட்டுத் தீரும். மறைந்து கிடந்த, மங்கிக் கிடந்த மாச்சரி

யம், புதுவேட்டையிலீடுபடும், சமூகத்தின் அமைதிக்கும் கேடுவரக்கூடும்.

காங்கிரஸ் வட்டாரத்துத் தலைவர்கள், திராவிடத் தலைவர்கள் இருக்கும் திக்கு நோக்கி, அபாயச் சங்கு ஊதும் நாள் பிறந்தே தீரும்.

ஜஸ்டிஸ் கட்சியின் திட்டத்தைத் தகர்த்து விட்டதால், மன மகிழ்ச்சி கொள்ளும், சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த, சுயநலக்காரர்கள் வினை விதிக்கிறுர்கள்— பலனை இந்தத் தலைமுறையிலேயே காண்பார்கள். வகுப்புகளுக்குள் விரோதம் மூளவும், அதன் பயனுக மக்கள் மனதிலே குமுறல் ஏற்படவும் போகிறது. அறிகுறிகள் இப்போதே, தெரிய ஆரம்பித்துவிட்டன.

ஏகலைவனிடம், 'கட்டை விரலை' வாங்கியாகிவிட்டது —கட்டை விரலை இழந்த ஏகலைவன் வாளாயிருக்கக்கூடும் —ஆனுல் அவன் பிறந்த சமூகம் வாளாயிருக்குமா ?

ஆதிக்கக்காரர், உடனடி இலாபத்தால் உச்சி குளிர்ந்து விடுகிறுர்கள்—எதிர்காலத்தில் எவ்வளவு பெரிய ஆபத்துக்கு அச்சாரம் கொடுத்து விட்டோம், என்பதை அறியாமல்.

கட்டுப்படுத்த முடியாத விதமாக, கயமைத் தனத்தைத் தூப தீப நைவேத்தியம் வைத்து வரவழைத்துக் கொள்ளுகிறுர்கள்-எங்கும், சேரன், செங்குட்டுவன்களைக் காணப்போகிறுர்கள் — கதர் உடையிலேயே காணப் போகிறுர்கள்—வெற்றிக்களிப்பு கருகுவதற்குள்.

அணையை உடைக்கிறார்கள், வெள்ளம் என்ன செய்யும் என்பதை அறியாமல்.

நமக்கு நிரம்பவேலை கொடுத்துவிட்டார்கள்-மறந்து விடுவோம் பிரச்னையை என்று மனதார எண்ணிக் கொண்டு, பார்ப்பனர்—அல்லாதார் பிரச்னையைப் பின்னணிக்குக்கொண்டுவந்துவிட்ட நம்மை, மீண்டும், மக்கள் மன்றத்திலே, வழக்குத் தொடுக்கச் செய்கிறார்கள்.

**மக்கள் மன்றத்துச் சட்டம் வேறு.**

அது சமூகநீதியை அடிப்படையாகக் கொண்டது. அங்கு நாம் வெற்றி பெறத்தான் போகிறோம்—அதற்கான அணிவகுப்பை, இத்தீர்ப்பின் மூலம், நாம் விரைவில் அமைத்துக்கொள்ளத்தான் போகிறோம்.

'சமர்த்தான காரியமடி, சரசு! பார்த்தாயா, இந்த மந்திரிகள் பேந்தப் பேந்த விழிக்கிறா!'—என்று உல்லாச உரையாடல் நடைபெறக்கூடும்.

'ஏண்டா, தடியா? வீணுகப் படிக்கிறே—உனக்கு இனி ஏது இடம் கல்லூரிகளில்...' என்று வேதனைக் குரலில் பேசும் பேச்சுக் கிளம்பியிருக்கிறது.

சட்ட சபையை ஆட்டிவைக்க முடிகிறது, கவர்னரைக் கனிவாக இருக்கும்படி செய்ய முடிகிறது, தொழிலாளர் தலைவர்களை மண்டையிலடித்து உட்காரவைக்க முடிகிறது, திராவிட இயக்கத்தாரை அடக்கு முறைக்கு ஆளாக்க முடிகிறது—இவ்வளவும் இதற்குமேலும்

செய்ய ஆற்றல் இருக்கிறது அமைச்சர்களுக்கு, ஆனால் சிறுபான்மைச் சமூகத்திலே சிலர் எதிர்த்து வேலை செய்யும்போது அமைச்சர்கள் "மூன்றும் பேஸ்துகள்" ஆக வேண்டியல்லவா நேரிடுகிறது? அமைச்சர்களை இந்தக் கோலத்திலா காணவேண்டும்? பட்டம் இருக்கிறது அமைச்சர் என்று, ஆனால் கம்யூனல் திட்டத்தைக் காப்பாற்றும் ஆற்றலைக் காணோம்—என்று கலக்கக் குரலில் பலர் பேசுகின்றனர்.

சீறிடும் தேசியச் சிங்கங்கள், இந்த வர்ணாஸ்ரமத் தாக்குதலைக்கண்டு, எலியானார், முயலானாரே!—என்று ஏளனமாகப் பேசுபவரும் உளர்.

இந்த வகையான பேச்சு இனி, மேலும் மேலும் வளரும்.

அமைச்சர்கள், சட்டசபையிலேயும் வெளியிலேயும், இந்தக் கம்யூனல் ஜி. ஓ. வைப் பலமாக ஆதரித்துள்ளனர்—எனவே, அந்தத் திட்டம் அழியாதபடி பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. அந்தப் பொறுப்பை மறப்பது, பண்பாகாது—தட்டிக் கழித்துவிட முயல்வது ஆண்மையாகாது—நாம் என்ன செய்வது என்று பேசுவது அறிவுடைமையாகாது. உள்ள உறுதியுடன், அமைச்சர்கள், இந்த நிலைமையை மாற்றி அமைக்க வழிவகை கண்டாக வேண்டும். இப்போதாகிலும். இடிமேல் இடிபட்ட பிறகாவது, யார் வகுப்புவாதிகள், எது வகுப்புவாதம், என்று நாட்டு

மக்களுக்கு எடுத்துக்கூற—உண்மை பேச—முன்வர வேண்டும்.

மாகாண சர்க்காரின் திட்டங்களைப் புது அரசியல் திட்டம் எவ்வளவு எளிதாக உடைத் தெறிகிறது என் பதை விளக்கவேண்டும்.

டில்லியின் ஆதிபத்யத்தையும், அதனுடன் தொடர்பும் பங்கும் கொண்ட, அல்லாடி போன்ருரின் ஆதிபத்யத்தையும் வெட்கமின்றி, விளக்கியாக வேண்டும்.

மாகாண சர்க்கார் ஒரு பஞ்சாயத்து போர்டுக்குச் சமமாகவே இருந்து வருகிறது என்பதையும் எடுத்துக் காட்டவேண்டும்.

மாகாணத்தின் மாண்புக்காக, மக்களின் எதிர் காலத்துக்காக, வகுப்பு நீதிக்காக, எவ்வளவு கஷ்ட நஷ்டம் ஏற்கவும் தயார், என்பதை டெல்லி உணரும் படி செய்யவேண்டும்.

பதவியை உதறித்தள்ளும் துணிவு ஏற்படவேண்டும் -இந்த அமைச்சர்களுக்கு. இவர்களிடம் நாடு,இவ்வளவும் எதிர்பார்க்கிறது-தன் மானத்தை இழக்காதிருக்கவேண் டும் என்று கூறுகிறது. என்ன செய்யப் போகிருர்கள் ?

வெற்றி பெற்றவருக்கு ஒரு வார்த்தை! இந்த வெற்றி, இனிப்பாகத்தான் இருக்கும்—துவக்கத்தில். ஆனல் இதன் முழு விளைவுகள் பிறகே தெரியும்.

மாகாண சர்க்காரையும் மந்திரிகளையும் மல்லுக்கு இழுத்து மண் கவ்வச் செய்தார்களே, இவர்களல்லவா வீராதி வீரர்கள், என்று மட்டும் ஆச்சரியப்படுவார்கள் என்று எண்ணி, ஏமாற வேண்டாம். இவ்வளவு ஆற்றலுள்ளவரையும் வீழ்த்தக்கூடிய தந்திரம் தெரிந்திருக்கிறதே இந்தச் சிறுபான்மைச் சமூகத்திலே உள்ள சிலருக்கு, எவ்வளவு ஆபத்தான மனிதர்கள் இவர்கள் என்று நாடு எண்ணும், பேசும்.

இன்று நேற்றல்லவே, பல தலைமுறைகளாக, எத்தனையோ விதமான, ஆட்சிக்காலத்திலும், இப்படித்தானே வகுப்பு ஆதிக்கம் புகுத்தப்பட்டது, என்று பேசப்படும். அந்தப் பேச்சு, நாட்டிலே எத்தனை இலட்சம் வீரர்களை 153-க்கு இழுத்துச் செல்லுமோ நாம் அறியோம்!

வெற்றி பெற்றவர்கள், தங்கள் வகுப்பின் இன்றையப் போக்கு, முன்னாள் நிலை, ஆதிக்க சுபாவம், ஆதிக்கத்துக்காகக் கையாளும் தந்திரம், சகலமும் பொதுமக்கள் மன்றத்திலே பேசப்படுவதைக் காணத்தான் போகிறார்கள்.

அல்லாடியாரும், சீனுவாச ஐயங்காரும் செய்த திருத்தொண்டு, மனுவையும் மாந்தாதாவையும், பதஞ்சலியையும், சாணக்கியனையும், மக்களின் நினைவிற்குக் கொண்டு வந்து நிறுத்தும்—நாட்டிலே வகுப்புகளுக்குள் இன்று ஓரளவுக்கு ஏற்பட்டுக் கொண்டுவரும், சமரசம் பாழ்படும். இது, நாட்டுக்கும் நல்லதல்ல, நல்லதோர்

வெற்றி பெற்றோம் என்று இன்று பூரிக்கும் வகுப்பினருக்கும் நல்லதல்ல.

வெற்றி பெற்றோம், என்று வீறுப்புப் பேசிக் கொண்டு, அந்தச் சிறுபான்மைச் சமூகத்திலே உள்ள, சுயநலமிகள் உலவிடுவது காணும்போது, புள்ளிமானைக் கொன்று தின்றுவிட்டு, இரத்தம் வாயில் சொட்டச் சொட்ட புதரருகே உலவும் புலியின் கவனம்தானே வரும்.

உள்ளது ஒரு கம்பு—இருவர் கேட்கின்றனர், எனக்கு, உனக்கு என்று—ஒருவன் கரடுமுரடான பாதையிலே, கடும் வெயில் வேளையிலே, பாரமான சாமானைச் சுமந்து வந்ததால், களைத்துக் கால் கடுத்துப் போய், ஊன்றுகோல் கிடைத்தாலொழிய நடந்து செல்ல முடியாத நிலையில் உள்ளவன்—மற்றவனோ, உல்லாச நடை நடக்கும்போது, அந்தக் கம்பு, தன்னிடம் இருந்தால் அலங்காரமாக, அந்தஸ்தாக இருக்கும் என்ற எண்ணத்துடன் இருப்பவன்—இருவரில், 'கம்பு' யாருக்குத் தரப் படவேண்டும்?

காசநோய்—மருத்துவர் தந்திருக்கிறார் சூரணம்—சாப்பிட்டால்தான் வேதனை தீரும்—சூரணத்தைத் தேனில் குழைத்துச் சாப்பிட்டாக வேண்டும்—தேன் கேட்கிறான், அந்த நோயாளி—தேவாலயத்திலே தரப் பட்ட கனியைக் கையில் வைத்துக் கொண்டு, இதைத் தேனில் தோய்த்துச் சாப்பிட விருப்பம், ஆகவே, தேன் எனக்குத் தருக, என்று கேட்கிறான், வாழ்வின் சுவை

விரும்பி—தேனுடன் தெளிவும் கொண்டவன் யாருக்குத் தருவான், தேன்!

வாடும் பயிருக்கு நீர் பாய்ச்சுவர்—வளைந்த வாழ்வை நிமிர்த்துவர்—வகை குலைக்கப்பட்டவருக்குக் கைகொடுப்பர், கண்ணும் கருத்தும் கெடாத கண்ணியவான்கள்.

பசி ஏப்பக்காரனுக்குக் கஞ்சிக் கலயமும், புளி ஏப்பக்காரனுக்கு மருந்து வட்டிலும் தரப்படுவதுதான் முறை என்று கூறுவர் மனித மாண்புணர்ந்தவர்கள்.

இருள் சூழ்ந்த இடத்துக்கு விளக்கொளி தேவை-இடர்பட்ட வாழ்வில் உழல்வோருக்கு உதவி தேவை.

மக்களின் நிலைமையைக் கண்டறிந்து, எவரெவர் எந்தெந்த நிலைமையில் உள்ளனர், அவருக்கு உற்ற குறைபாடுகள் யாவை, அவைதமைக் களைய எம்முறையைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை ஆய்ந்து, ஆவன செய்து, ஒரு நாட்டு மக்களிடையே, ஏற்றத் தாழ்வு, சமூக அமைப்பையே குலைத்துவிடக் கூடியதாக இருக்குமானால், நிறை கெடாத நிலையை உண்டாக்கக் கூடிய முறைகளை வகுத்தலே நல்லாட்சியாளர் செய்யவேண்டிய கடமை-அதுவே ஆட்சியின் மூலம் மக்கள் பெற வேண்டிய பேறு.

ஓநாயை வேட்டைக்காரன் கொன்று விடாமல் பாதுகாப்பது அல்ல, நீதி—ஓநாய், ஆடுகளைக் கொன்று விடாமல் பாதுகாப்பதுதான் நீதி—நேர்மை.

வலுத்தவன் இளைத்தவனை ஏவலனுக்கிக் கொள்ளக் கண்டு, அது அவனவன் திறமையைப் பொறுத்தது என்று அறிவும் அன்பும் ஒரு சேரப் பெற்ற எவரும் கூறுர்—அங்ஙனம் கூறுவோ ஆட்சியாளர் ஆகிவிட்டால், நாடு, காடு ஆகும்.

நம் நாடு, சமூக ஏற்றத்தாழ்வு மிகுந்துள்ள இடம் என்பது, வாதத்துக்குரிய விஷயமல்ல — உலகறிந்த உண்மை.

ஏற்றத்தாழ்வு, ஏன் ஏற்பட்டது, யார் ஏற்படுத்தினுர்கள், என்பதும், இனி நான் கூறி மக்கள் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமல்ல—நாடு அறிந்த இரகசியம்—நானிலம் கைகொட்டிச் சிரிக்கும் கேவலத்தன்மை வாய்ந்த விஷயம்!—அவனி அறியும்.

இந்த ஏற்றத்தாழ்வின் பலனுக, சமுதாயத்திலே வேதனையும் வெறுப்பும், மாச்சரியமும் மனத்தாங்கலும், போட்டியும் பூசலும் மலிந்து கிடப்பதையும் யாரும் மறுக்க முடியாது.

சமூகம், குமுறும் எரிமலையாகிக் கிடப்பதை மறைத்துப் பயனில்லை.

சமூகத்தின் கட்டுக்கோப்பு, நிலை குலையக் கூடிய அளவுக்கு, வகுப்பு, நிலைமையில் வித்தியாசம், நினைப்பில் வித்தியாசம் இருக்கிறது—இதனையும் யாரும் மறுக்கத் துணிய, மாட்டார்கள்.

அவனவன் வினைப்பயன் - அயன் அன்று எழுதியது ஆண்டவன் அவனை உயர்ந்த ஜாதியாகப் பிறப்பித்து விட்டான்—என்று பேசுவதும் நம்புவதும், பழங்கதையாகி விட்டதுடன், அவன் ஏன் உயர்ந்தான், எப்படி உயர்ந்தான், அந்த 'உயர்வு' எவ்வளவு 'கேடு' செய்கிறது என்பது பற்றி, எண்ணவும் பேசவும் மக்கள் முன் வந்து விட்டனர். இந்த விழிப்புணர்ச்சியின் காரணமாக- சமூகத்திலே புது நீதி காணவேண்டும், என்ற உரிமை உணர்ச்சி கிளம்பிற்று. நாமும் வாழப் பிறந்தவர்கள் தான்- நாமும் இந்நாட்டுக் குடிகள் தாம்—நாம் யாருக்கும் தாழ்ந்தவர்களல்ல—யாரையும் நாம் தாழ்வாகக் கருதவும் கூடாது—என்ற அறிவுடைமைப் பேச்சு கிளம்பிற்று.

கல்வி நிலயங்களில், உத்தியோக மண்டலங்களில், ஊராட்சி மன்றங்களில், பயன் தரும் அலுவலகங்களிலே எல்லாம், ஒரே வகுப்பார், ஏகபோக மிராசு செலுத்து கிறார்களே—ஏன்? எப்படி? ஏன் இப்படி ஒரு நிலைமை வளர்ந்தது? அதோ ஆசிரியர் அரங்கசாமி அய்யர் போகி றார், இதோ பார் வக்கீல் வரதாச்சாரியார், டாக்டர் ரங் காச்சாரியார் ரோல்ஸ் ராய்ஸ் பார்! கலெக்டர் கலியாண ராமய்யர், ஆடிட்டர் அனந்தாச்சாரியார், தாசில்தார் சுந்தர ராஜ அய்யங்கார்!—என்று பேசப்படவேண்டிய விதமாக உத்யோக மண்டலம் ஒரு வகுப்பாரின் ஏகபோக மிராசு பாத்யதையாக இருந்தது. சகல துறைகளிலும், வாழ் வில் மேன்மையும் பயனும் தரத்தக்க சகல முனைகளிலும், ஒரே வகுப்பார் குவிந்து விட்டனர்—அதிலும் அந்த அளவுக்கு ஏகபோக மிராசு செலுத்திய வகுப்பு, சமூகத்

திலே பெரும்பான்மை வகுப்பல்ல—சிறுபான்மையினர் 100-க்கு 3 பேர்!

இந்த நிலைமையைப் புரிந்து கொள்ளவே, தெளிவு தேவைப்பட்டது.

அந்த வகுப்பு, 'மேல் குலம்' 'ஆளப் பிறந்த குலம்' ஆண்டவனாலேயே அவ்விதம் படைக்கப்பட்ட குலம்— என்ற மூடநம்பிக்கை முறியவே நெடுங்காலம் பிடித்தது.

இந்த மூடநம்பிக்கையை முறியடிக்கப் பலர், 'நாத்திகர்' என்ற நிந்தனையையும் 'மதத்துவேஷி' என்ற பழியையும் ஏற்றுக்கொள்ளவேண்டி நேரிட்டது—தயங்கவில்லை! வெற்றியும் கிட்டாமலில்லை! ஒரு வகுப்பைப் பிறப்பாலேயே மேலானது, ஆளப்பிறந்தது, முகத்தில் தோன்றியது, பூதேவர் என்று எண்ணுவது, மடமை, எண்ணச் செய்வது கொடுமை, என்ற உண்மையை மக்கள் உணர்ந்தனர், உணர்ந்த பிறகு கேட்டனர், உரிமைக் கனல் உமிழும் கண்களுடன், ஒரு சிறுவகுப்பு இவ்வளவு பெரும் பலனை அனுபவிப்பதா? மிகப் பெரிய வகுப்பு, பாடுபட்டுப் பலன் காணாத கூட்டமாக நலிவதா?—என்று கேட்டனர்—முதலில் மிகச்சிலர் கேட்டனர், பலப்பலர்—பிறகு நாட்டின் பெரும்பான்மையினர் கேட்கலாயினர்.

ரங்காச்சாரியார் போன்ற திறமையுள்ள டாக்டர் கிடையாது என்று அல்லாடி அய்யர் சொன்னதை அரியக்குடி ஐய்யகார் கேட்டுக்கொண்டிருந்ததாக கஸ்தூரி ஐயர் பத்திரிகையிலே எழுதிய கட்டுரையை ஜஸ்டிஸ் சதாசிவ

ஐயர் படித்துவிட்டு வெங்கட்டரமண ஐயர் வீட்டிற்குப் போக அங்கு அவர் கிட்டப்பா ஐயருடைய சங்கீத ஞானத்தைப் பிடில் கிருஷ்ணய்யருடைய ஞானத்தோடு ஒப்பிட்டுப்பேசக் கேட்டுப் பூரித்தனர் என்று தெரியவருகிறது— என்று இம்முறையிலே 'சேதி' வந்து கொண்டிருந்தது.

மனம் எவ்வளவு குமுறி இருக்கும், விஷயமறிந்தவர்களுக்கு.

ஒரு நாடு வளமாவதும், பாதுகாக்கப்படுவதும், அந்நாட்டு மக்களின், உழைப்பால், வீரத்தால், தியாகத்தால்! ஒருநாட்டு ஆட்சி நடைபெற, வரி தருவது அந்நாட்டு மக்கள். நாட்டுக்குத் தேவையான உழைப்பும், ஆட்சிக்கு அவசியவான வரியும் தரும் மக்களிலே, பெரும்பான்மையினர், ஒரு சிறுபான்மையினரிடம் சகல துறைகளையும் ஓப்படைத்துவிட்டு, உழைப்பாளிகளாக இருப்பது எந்த வகையான நியாயம்? போரிடவும் உழைக்கவும், வரி கொடுக்கவும் நாங்கள்—வாழவும், அதிகாரம் செலுத்தவும் கல்வி வசதி பெறவும் அவர்களா! அவர்கள் மிகச் சிலர்—நாம் மிகப்பலர்! அவர்கள் ஆதிக்கம் செய்வது, நாம் ஆளடிமையாவதா! இது ஏன்? இந்த வேதனை தரும் விசித்திரம் வேறு எங்கேனும் உண்டா? வேறு எந்த நாட்டிலேனும் இந்த முறையை முறியடிக்காது விடுவரா? கண்ணுள்ளோரே! காணுங்கள்! காதுள்ளோரே, கேளுங்கள்! வாயுள்ளோரே பேசுங்கள்! வீரர்களே! விழித்தெழுங்கள்! விடுதலை விரும்பிகளே! உரிமைக்குப் போராடுங்கள்!—என்ற முழக்கம் திக்கெட்டும் கேட்கலாயிற்று.

ஆதிக்கக்காரர்கள் அஞ்சினர் — ஆண்டையைக் கேள்வி கேட்கும் திறமும் நெஞ்சுரமும் அடிமைக்கு உண்டாகி விட்டதே, அங்குசம் இருக்குமிடத்தை துதிக்கையால் யானை தடவிப்பார்த்து கண்டுபிடித்து விட்டதே— என்ன செய்வது என்று ஏங்கினர். மேலான ஜாதியாக அயனால் படைக்கப்பட்டவர்கள் நாங்கள் என்ற பழைய பேச்சு பயனற்றுப் போனது கண்டனர்—புதிய, பல்லவி பாடலாயினர்.

யார் வேண்டாமென்றார்கள், நீங்களும் படித்துத் தேறி—பட்டம் பெற்று, 'டாக்டராகவும் என்ஜினீயராகவும், வக்கிலாகவும், கலெக்டராகவும், ஆசிரியராகவும், ஆடிட்டராகவும் உத்தியோகம் பாருங்களேன் — யார் தடுக்கிறார்கள்! என்று பேசினர், மேதைகள் என்ற பட்டியலில் தங்கள் பெயரை பொறித்துக்கொண்டவர்கள்.

சரி, என்று அந்த அறைகூவலைப் பெரும்பான்மையினர் ஏற்றுக்கொண்டனர் — கல்வித் துறையில் கண்ணோட்டம் சென்றது—ஆனால், அங்கோ!! அந்தச் சிறு வகுப்பின் 'கோட்டை'யாகக் கிடந்தன கல்வி நிலையங்கள்.

"உன் நாக்கிலே தர்ப்பையைப் போட்டுக் கொளுத்த வேணுமடா, மண்டு!"

"உனக்கேண்டா; படிப்பும் பட்டமும், உன் தோப்பன் வேலையை நீயும் செய்—அதுதான் முறை"—என்று பேசும் ஆசிரியர்கள் —"இரெண்டெழுத்து படித்தது போதும் குடும்பத்தைக் கவனிக்க, ஏதோ ஒரு 'கடை கண்

ணிக்'குச் சென்று, நாலோ, எட்டோ, பெற்றுவாடா'' என்று ஈனக் குரலில் பேசும் பெற்றோர்—இவ்விதச் சூழ் நிலை!—இதிலே உழன்றதன் விளைவாகத்தான், மேலும் ஓர் புதிய உண்மை புலனாயிற்று—நாட்டிலே நல்ல நிலை யும் உத்தியோக மண்டலத்திலே உரிய பங்கும் பெற வேண்டுமானால், முதலிலே கல்வித் துறையிலே வகுப்பு நீதி கிடைக்க வேண்டும், என்று கூறினர். இந்த அடிப் படை நியாயத்தை வலியுறுத்தி, வெற்றி கண்டது ஜஸ்டிஸ்கட்சி. அதன் திட்டந்தான், கம்யூனல் ஜி. ஓ. சமூக நீதிக்காக, வகுப்பு எதேச்சதிகாரம் ஏற்படா திருக்க, ஏகபோக மிராசு முறையை ஒழிக்க, சிறுபான் மையோர் ஆதிக்கம் அழிந்துபட, பெரும் பான்மையோர், புது வாழ்வு பெற, ஏற்படுத்தப்பட்ட திட்டம்.

## வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை

இதன்படி கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்படு வதும், உத்யோகங்களில் இடம் தரப்படுவதும், வகுப்பு வாரி முறைப்படி நடைபெற்றுக் கொண்டு வந்தது.

இந்த வகுப்பு நீதி முறையின் பயனாகத்தான், நாட் டின் பெரும்பான்மை மக்களான பார்ப்பனரல்லாதாரின் அறிவுக்கண் திறக்கப்பட்டு, உரிமை உணர்ச்சி ஏற் பட்டு, உத்யோக மண்டலத்தில் புக வழி ஏற்பட்டு, ஓரளவு முன்னேற்றம் அடைய முடிந்தது.

B. A. என்றும், M. A. என்றும், மாஜிஸ்ட்ரேட் என்றும், தாசில்தார் என்றும், இன்ஸ்பெக்டர் என்றும்,

ரிஜிஸ்ட்ரார் என்றும், டாக்டர் என்றும், என்ஜினியர் என்றும், புரபசர் என்றும், ஆபீசர் என்றும், பெயர் சொல்லிக் கொள்ளக்கூடிய நிலை, ஒரு சிலருக்காவது, பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் ஏற்பட்டது.

பாலைவனம் ஆக்கப்பட்டிருந்த சமூகத்தில் சோலை வனம் அமைக்க அடிப்படை இருத்தப்பட்டது. சமுதாயத்தின் கட்டுக்கோப்பு குலைந்து விடுமோ என்ற அச்சம் ஒழிந்து பெரும்பான்மையினரைப் பிடித்தாட்டி வந்த பீதியும் பீடையும் ஓரளவுக்கு ஒழிக்கப்பட்டு, பெரும்பான்மை வகுப்பினர், தலை நிமிர்ந்து நடக்கவும், தன்மானம் பெறவும், உரிமையுடன் உலவவும் முடிந்தது. பாலைவனமாகிக் கிடந்த பெரும்பான்மை வகுப்பிலே, பாரோர் கண்டு வியக்கத்தக்க மேதைகள் தோன்றலாயினர். எல்லாத் துறையிலும் வெற்றி கிடைத்தது சந்தர்ப்பம் தரப்படாததால், பெரும்பான்மை வகுப்பு தாழ்வுற்றுக் கிடந்ததேயன்றி, அறிவு வளமும் ஆற்றலும் அறவே அற்றுப்போனது அல்ல, பெரும்பான்மைச் சமூகம் என்ற உண்மை உலகுக்கு அறிவிக்கப்பட்டது உரிமைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தவர்கள் உவகை அடைந்தனர்; மாசு துடைக்கப்பட்ட மணி என ஒளி விடத் தொடங்கிற்று பெரும்பான்மை வகுப்பு. திறமை என்பதும், அறிவு ஆற்றல் என்பதும், ஏதோ ஒரு வகுப்புக்கு மட்டுமே பரம்பரைச் சொத்து அல்ல என்று மார் தட்டிச் கூற முடிந்தது பெரும்பான்மையினரால் - ஏகபோக மிராசு பாத்யதை அழிந்து வந்தது - சர்வம் பார்ப்பன மயம் ஜகத்! - என்ற நிலைமை மாறி, கலெக்டர்

கலியாணராமய்யரைத் தாசில்தார் தீர்த்தகிரி முதலியார் வரவேற்றார் என்றும், வக்கீல் வரதாச்சாரியாருக்கு டாக்டர் அண்ணாமலைப்பிள்ளை ஆபரேஷன் செய்தார் என்றும்,ஆசிரியர்,அருமை நாயகத்தைப் பற்றி ஆடிட்டர் சுந்தரராமய்யர் பாராட்டினார் என்றும் - இவ்விதமான பேச்சு, நாட்டிலே பேச முடிந்தது.

இது பொறுக்கவில்லை ஆதிக்கக்காரர்களுக்கு!

வகுப்புவாரி முறையின் துவக்க முதல், அதைத் தொலைத்த நாள்வரை, போரிட்ட வண்ணம் இருந்தனர்-பல வழிகளாலும்.

வெற்றிபெற்றும் விட்டனர்—வகுப்பு வாதிகள் வகுப்பு எதேச்சதிகாரம் செய்ய, தகுதி என்ற தந்திராயுதத்தைப் பயன்படுத்தினர்.

எந்த வகுப்புவாரி முறை, சமூகக் கட்டுக் கோப்பைக் காப்பாற்றி வந்ததோ, எந்த வகுப்புவாரி முறை வகுப்பு எதேச்சதிகாரத்தை ஓரளவு ஒழித்து வகுப்பு நீதியை வழங்கிற்றோ, எந்த வகுப்புவாரி முறை, வரியில் பெரும் பகுதியைக் கொட்டிக் கொடுத்து, நாட்டைக் காக்க இரத்தம் சிந்திய பெரும்பான்மையினர் ஓரளவு கல்வி வசதி பெறவும் உத்தியோக உரிமை பெறவும் உதவிற்றோ, எந்த வகுப்புவாரி முறைக்காக தியாகரின் தியாகமும், நாயரின் நுண்ணறிவும், பனகலின் பரிபாலனத் திறனும், நடேசனாரின் அறிவாற்றலும், முத்தையாவின் உத்தரவும் பயன்படுத்தப்பட்டதோ எந்த வகுப்பு

வாரி முறைக்காக எண்ணற்ற இளஞ்சிங்கங்கள் பணியாற்றி வந்தனரோ, எந்த வகுப்புவாரி முறை ஒரு காமராஜரைச் காங்கிரசிலும் ஒரு குமாரசாமி ராஜாவை மந்திரி சபையிலும், ஒரு லட்சுமண சுவாமியை வைத்தியத் துறையிலும், ஒரு எதிராஜை வக்கீல் துறையிலும், ஒரு ராஜமன்னாரை ஹைகோர்ட்டிலும்,ஒரு பத்ரோவை போலீஸ் இலாகாவிலும், ஒரு சண்முகத்தை நிதி நிபுணர் துறையிலும், ஒரு ஆற்காட்டாரை அவனி அறிஞர் மன்றத்திலும், ஆட்சி செலுத்த உதவிற்றோ, அந்த வகுப்புவாரி முறை சட்டவிரோதமாகிவிட்டது!

எந்த வகுப்புவாரி முறையை ஒழித்துக்கட்டித் தீருவது என்று சுயநலச் சூழ்ச்சிக்காரர்கள் சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்து வந்தனரோ, அவர்கள் வெற்றி பெற்றுவிட்டனர்.

முப்பது ஆண்டுகளாக நாடு முழுவதும் நல்லறிவாளர்கள் பேசிப்பேசி ஆதரவு திரட்டினர்—அந்த வகுப்புவாரி முறை, இதோ சட்டவிரோதம் என்று ஆகிவிட்டது!

அமைச்சர்கள், தமது அறிவாற்றலை இதற்கு அரணாக அமைத்தனர் - எனினும், அம்முறையை, சட்டத்தின் துணைகொண்டு முறித்துவிட்டனர், வகுப்பு எதேச்சதிகாரிகள்.

அமைச்சர்களே! என்ன செய்யப் போகிறீர்கள்? சமூக நீதியைக் காக்கப் போரிடப் போகிறீர்களா? அல்

லது சந்து பொந்து தேடி அலையப்போகிறீர்களா? சம உரிமை பேசும் தோழர்களே! இதோ, சிறுபான்மை யோரின் எதேச்சதிகாரம் மீண்டும் தலைவிரித்தாடப் போகிறது, அதற்கான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது- என்ன செய்யப்போகிறீர்கள்?

உத்தமரே! ஓமந்தூராரே! கர்ஜனை புரியும் காம ராஜரே! கொட்டு முழக்குடன் பேசிய கோபாலரே! பகை மூட்டாத வகையுடன் பேசும் பக்தவத்சலனாரே! நெஞ்சுரம் கொண்ட குமார சாமியாரே! நேர்மையாளர் களே! நாட்டுத் தலைவர்களே! நிலைமையைக் கவனியுங் கள்! எதிர்கால வேலைத் திட்டம் என்ன?

சட்ட விரோதம் - கம்யூனல் ஜி. ஓ; - இது தீர்ப்பு. என்ன செய்யப் போகிறீர்கள்?

சட்டத்தின்படி தரப்பட்ட தீர்ப்பை ஏற்கத்தான் வேண்டும்-குறை கூறுவது அடாது.

ஆம்! சட்டம், சரி. சமூகம் இனி, என்ன ஆவது' புதிய நிலைமையின் படி?

சர்வம் மீண்டும் பார்ப்பன மயம்!-இதுதான் விளைவு. சரியா-அனுமதிக்கப் போகிறீர்களா? அறிவும் ஆற்ற லும் இல்லை, அன்பும் அறமும் இல்லை, துணிவும் பண் பும் இல்லை, என்றால் அதையாவது வெளிப்படையாகக் கூறி விடுங்கள், "பார்ப்பனரல்லாதாரே! பள்ளிகளிலே நீங்கள் முன்போல 'இடம்'பெற முடியாது - உத்யோக மண்டலத்திலே-இடம் கிடைக்காது-எனவே, கட்டை

வெட்ட, கல் உடைக்க, குப்பை கூட்ட, மாடு மேய்க்க, வண்டி ஓட்ட, மூட்டை தூக்க, செக்கு இழுக்க-இப்படிப்பட்ட 'துறைகளிலே' இடம் பிடித்துக் கொள்ளுங்கள்-மற்றத் துறைகளிலே நீங்கள் 'இடம்'பெற முடியாது-நாங்களும் நிலைமையை மாற்ற வல்லவர்களல்ல—என்றுவது ஆளவந்தார்கள் கூறிவிடட்டும் - தியாகர் கல்லறை மீது கண்ணீர் சிந்திவிட்டு, நாம் கிளம்புவோம், உரிமைப் போர்க்களத்துக்கு அறப்போர் மூலம், இழந்த உரிமையை மீண்டும் பெற! விரைவில் வெளிவரவேண்டும், ஆளவந்தார்களின் திட்டம். நாட்டுப் பெருங்குடி மக்களே! உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள், தெளிவாக! **வந்ததுவிபத்து!** அழிந்தது சமூக நீதி! இனி சர்வம் பார்ப்பன மயம்!! ஆம்! ஆம்! இந்த வேதனைதரும் நிலையை மாற்ற என்ன வழி? தலைவர்களே! ஒன்று கூடிப் பேசி, திறம்படத் திட்டம் தீட்டுங்கள் - நாட்டு இளைஞர்கள் தயாராக உள்ளனர்-நீதியை நிலை நாட்டும் அறப்போரில் ஈடுபட்டுத் தியாகம் புரிய. வழி காட்டுங்கள்-விரைவில்.

# பழங் கதை!

(காஞ்சி—கல்யாணசுந்தரன்)

—(::)—

மனு, மனித குலத்தின் பகைவன். மாந்தாதா, அவன் கூட்டுத்தோழன். யாக்ஞியவல்கியனுக்கும் அதே உறவு முறை.

வேதன் தோற்றுவித்தது நான்கு ஜாதி. அதற்கு விளக்கம் தந்தவர் வேதவியாசர்.

பிர்மாவின் முகத்திலே பிறந்தவர் பார்ப்பனர். தோளிலே, துடையிலே, பாதத்திலே பிறந்தவர்கள் முறைப்படி க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்.

ஒவ்வொரு வகுப்பினருக்குத் தனித்தனித் தொழில். பொதுவாக மூன்று குலத்தவர்க்கும் சிறப்பாகப் பார்ப்பனருக்கும், ஏவல் செய்து எடுபிடியாக வாழ்வதற்கே சூத்திரர் பிறப்பிக்கப்பட்டனர்.

குலத் தொழிலை விட்டு விலகுவதோ, விலக நினைப்பதோ, வெறுப்புக் காட்டுவதோ, அலட்சியப்படுத்துவதோ கூடாது—கண்டிப்பாகக் கூடாது. வேதம் இதனை

வரையறுத்தி வற்புறுத்துகிறது. கீதாசிரியன் இதனை போதிக்கிறான், உயர்ந்த ஞானம் என்று.

இதற்குப் பெயர் தர்மம்! இதனைச் செய்—அதனைச் செய்யாதே என்று ஒவ்வொரு குலத்துக்கும், கடமைகள் இன்னின்ன என, தேவ கட்டளை இருக்கிறது. உரிமை ஒரு குலத்துக்கும் கிடையாது, பார்ப்பனர் நீங்கலாக.

கடமையைச் செய்யத் தவறினால் கடுந்தண்டனையுண்டு. மூக்கறுத்தல்—நாக்கறுத்தல்—காதைக்குடைந்தெடுத்தல்—கண்ணைக்குத்திக் குருடாக்கல்—புட்டத்தைச் சிதைத்தல்—கால் கைகளைத் துண்டித்தல்—தண்டனையின் பட்டியலில் காணப்படும் சில, இவை!

முதல் குலத்துக்கு இது விதி விலக்கு. வேதனின் முகத்திலே பிறந்ததால், அவர்களை, இந்தக் கொடுமை அண்டுவதில்லை—அண்டவும் துணிவது இல்லை.

மனுவின், காருண்ணியம் நிறைந்த விசித்திர சிருஷ்டி இத்தண்டனைகள்—இல்லை—சட்ட திட்டங்கள்—நல்ல தீர்ப்புகள்!

ஓரவஞ்சனை—பாரபட்சம்—அக்கிரமம்—அநீதி—கயமை—என்றெல்லாம் கூறுவர், இதனை, நீதியின் இலட்சணம் அறிந்தோர், நேர்மையின் தன்மை தெரிந்தோர், மனிதப் பிறவியின் பெருமை உணர்ந்தோர். மனுவிஷயத்தில் இவ்வளவும் வெறும் பழிச்சொல்லாகி விடுகிறது. அதனைத் தீண்டுவதும் இல்லை இந்த அறுவெறுக்கத் தகுந்த குணவிசேஷங்கள்!

புல்வாயின் எலும்புகள், குகை வாயிலே குவிந்து கிடக்கக்கண்ட, புலிக்குட்டிகளிடம், தாயைப் பழித்தது கூறும் தன்மை இருக்க முடியுமா? தாயிடத்திலே தனி மதிப்பும், தாயின் திறத்திலே தளராத நம்பிக்கையும் புலிக்குட்டிகளுக்கு இருப்பது இயற்கைதானே?

புலியின் பசிக்கு இரையாகியதால், தாயைப் பறி கொடுத்து, துன்பத்தில் சிக்கித் துடிதுடிக்கும் புள்ளி மான் குட்டிகளுக்குத் தங்களை இக்கெதிக்களாக்கிய புலியிடம், அன்பா பிறக்கும்? ஆசையா தோன்றும்? அச்சமும் அருவருப்பும்தானே புலிக்குட்டிகளின் உள்ளத்தில் நிரம்பி இருக்கும்?

பார்ப்பனர் படிக்கலாம், பாடலாம், ஆடலாம், ஆண் பெண் வேற்றுமையின்றிக் கூடலாம், குலவலாம், பாடுபடாமல் பிறர் உழைப்பாலே வாழலாம். வளமாக வாழ்க்கை நடத்தலாம். சூத்திரருக்கு இந்த உரிமை கிடையாது. இதுபற்றி எண்ணவும் கூடாது-எண்ணுவது மகாபாதகம்—இம்மையிலும் கடுந்தண்டனை—மறுமையிலும் நரகவேதனை உண்டு.

சம்பூகன் ஒரு சூத்திரன். பார்ப்பனருக்கு மாடு போல் உழைப்பதை மறந்தான். காட்டில் சென்று தவம் செய்து, 'பிறவிப் பெருங்கடல்' நீந்தும் பெரும் பணியில் ஈடுபட்டான். சம்பூகன் பிறவாப் பெரியோனை நினைத்துக் கடும்புலிவாழும் காட்டில் கண்மூடி உட்கார்ந்தான், அயோத்தி நகர் அக்ரகாரத்தில் பார்ப்பனக் குழந்தை ஒன்று முடிவாகக் கண்ணை மூடிவிட்டது.

குழந்தையைப் பெற்றேன், தசரதராமனின் அனுமதி யின்றி அந்தப்புறம் சென்று, 'அடுக்குமா இராமா? உன் னுடைய ஆட்சியிலே இத்தகைய உற்பாதம் ஏற்பட லாமா? தர்மம் தொலைந்ததே! அதர்மம் கோலோச்சு கிறதே! சனாதனம் சாய்ந்ததே! சண்டாளத்துவம் உச் சம் பெறுகிறதே! சம்பூகன் தவம் செய்கிறான்! அவன் சூத்திரன்! அவன் கடமை தவம் செய்தல் அல்ல! ஆண்ட வனை அடைய அவன் முயற்சிப்பது அடாது! சுதர் மத்தைச் சுக்கு நூறாக்குகிறான்! சனாதனத்தைச் சீரழிக் கிறான்! பிராமணோத்துமர்களுக்குப் பணிவிடை செய்வ தன்றோ சம்பூகன் கடமை! சூத்திரனான சம்பூகன் குல தர்மத்தைக கைவிட்டதால், ஜாதி ஆசாரத்தைத் துறந்த தால், அடிமை நிலையை உதறித் தள்ளியதால், தர்மம் கெட்டது—தர்மம் குலையவே, என் குழந்தை இறந்தது! சூத்திரனின் துடுக்கடக்குங்கள்! தவக்கோலம் கொண்ட தருதலையின் தலையை வெட்டி வீழ்த்துங்கள்! குல தர்மத்தை மீறுவோருக்கு அது ஒரு படிப்பினையாக இருக்கட்டும்! முன்பின் யோசிக்காதே! தவசியைக் கொல்லலாமா என்று தயக்கம்காட்டாதே தர்மசொரூபி நீ! அரசன் நீ! அரசனின் கடமை அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவது! தர்மம் இது என சனாதனம் கூறுகிறது! அதனை துச்சமாக மதித்து நடந்து விட்டான் சம்பூகன்! போ! போ! தர்மத்தைக் காப்பாற்ற, தவம் செய்யும் சூத்திர சம்பூகனின் தலையை தயை தாட் சண்யம் பார்க்காமல் வெட்டி வீழ்த்து! தர்மாத்மா என்ற புகழுக்குரியவனாக, அப்பொழுதுதான், இராமா

பிராமணர், உன்னை ஏற்றுக்கொள்வர்!'' என்று கதறினன்.

**சம்பூகன் தலை, ராஜா ராமனுல் துண்டிக்கப்பட்டது. பார்ப்பனக்குழந்தை உயிர்பெற்று எழுந்தது!**

*   *   *   *

இதுதான் பிராம்மணியம்—சனாதனம்—வருணாஸ்ரமம்—முதல் போடாத ஆரிய சுரண்டல் இயந்திரம்.

இந்தச் சுரண்டல் அமைப்பு முறையில், தொழில் தூற்றப்பட்டது, உழவு பழிக்கப்பட்டது; மானம் நிந்திக்கப்பட்டது; வீரம் வாழ்க்கையை விட்டே விரட்டப்பட்டு விட்டது.

தொழிலுக்கு பதில் தூபதீபம், உழவுக்குப் பதில் யாக யோகம், மானத்துக்குப் பதில் உயர், வீரத்துக்குப் பதில் வஞ்சகம், நாட்டு மக்களிடம் புகுத்தப்பட்டது.

வாள் இருந்த இடத்தைப் புல் பற்றிக்கொண்டது. அரிமா இருந்த இடத்தில் நரி அமர்ந்து விட்டது.

அறிவு அகற்றப்பட்டு, மாயை பற்றிய பேச்சு வலுத்தது, மனிதனை மனிதனுகவே கண்டு பழகும் நிலை தொலைந்து, மனிதனைப் பிறப்பினுலேயே தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்று பேசி வெறுக்கும் ஜாதி வேற்றுமை வளர்ந்தது.

அறம், பொருள், இன்பம் பற்றி மட்டுமே பேசி, மக்களை நல்வழிப்படுத்தும் தமிழ்நூற்கள் பலவும் மறைக்

கப்பட்டு விட்டன. கடல் கொண்டது-செல்லறிக்கப்பட்டது என்று ஒழிக்கப்பட்டு விட்டன தமிழ் நூற்கள் பலவும்.

ஆரிய வேதம், வெற்றிக் களிப்போடு பவனி வந்தது, இதிகாச புராணங்கள் இடம் பெற்றன. கீதை கொலு வேறிற்று. தமிழ் மொழியும், அதனடியாகப் பிறந்த வாழ்க்கை வழியும், நாட்டைவிட்டு அறவே அழிக்கப்பட்டு, அகற்றப்பட்டு விட்டன.

மாயாவாதம் மக்கள் மன்ற மேறிற்று. 'மண்ணுவது திண்ணம் வாழ்வாவது மாயம்' என்ற போலித் தத்துவம் மக்களை மிருக நிலைக்கு இழுத்துச் சென்று விட்டது. மோட்ச நரகம் மக்கள் மூளையில் ஆசையையும் அச்சத்தையும் மூட்டியது.

நாடு காடாயிற்று. நாட்டு மக்கள், உயர்ந்த மக்கள் நிலையிலிருந்து மாக்கள் நிலைக்குப் போய் விட்டனர். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உண்மையை மக்கள் மறந்தனர். வாழ்வு கசந்து விட்டது. தன்னம்பிக்கை போய் விட்டது. தெளிவு போய்ப் போதை! ஒளிபோய் இருள்! அழகு போய் அசிங்கம்! அறம் போய் மறம்!

வஞ்சகத்துக்கு வரவேற்பு — சதிக்கு மதிப்பு — சூழ்ச்சிக்கு மரியாதை—நாட்டு மக்களின் நிலை இந்த அளவிற்குத் தடுமாறிப் போய் விட்டது.

உலக வாழ்வு ஒரு கூட்டத்தின் சொத்தாயிற்று. சுகம், அந்தக் கூட்டத்தின் உடன் தோன்றியதாயிற்று. கல்வி, அக்கும்பலின் பிறப் புரிமையாயிற்று.

சம்பூகன் போன்ற தியாகிகள் தோன்றவில்லை. உரிமையைப் பெற உயிரைப் பணயம் வைக்கும் இயல்பினர் ஏற்படவில்லை. விபீஷணர்கள், சுக்ரீவர்கள், அனுமான்கள் கூட்டம் பெருத்தது!

சாகப் பிறந்த நமக்குப் படிப்பெதற்கு? வேலை செய்யப்பிறந்த நமக்குப் படிப்பெதற்கு? கல்வி கற்றாலும் நமக்கு வராது! நாம் அடிமை; எண்ணும் எழுத்தும் நமது நாவிலே நுழையாது! அது பார்ப்பனர்களின் தொழில்—பிறப்புரிமை—என்ற நினைப்பு, அழிக்க முடியாத நிலையில், ஆழப்பதிந்து விட்டது இந்த நாட்டில்.

வீரர்களை வீழ்த்த, சமரசம் பேசினவர்களைச் சிதைக்க, சமத்துவம் போதித்தவர்களைச் சாய்க்க, சாணக்கியர்கள்—காகப்பட்டர்கள்—வெங்கண்ணாக்கள்—உமிச்சந்துகள் தோன்றலாயினர். பொய் மலிந்த புராண புருஷர்கள் அல்ல இவர்கள்; வரலாற்றிலே இடம் பெற்றுள்ள நல்லவர்கள்!

மனுவின் ஏற்பாட்டால், சனாதன தர்மத்தால், பார்ப்பனர் ஒருவரே உயர் வாழ்வு வாழமுடிந்தது; மற்றவர்களைத் தங்கள் கருத்துக்கிசைய ஆடச் செய்ய முடிந்தது; மற்றவர்களைக் காலடியில் போட்டு மிதித்துத் துவைக்க முடிந்தது.

பிராம்மணீய ஏற்பாட்டால் சகல சம்பத்தும், பார்த்த உடனே உயர்ந்தவன் என்று பிறர் புகழ்ந்து கூறும், உலகத்தில் வேறு எங்கும் எவருக்கும் கிடைக்காத

பெரும் பேறும், அனைவரும் அடிபணியும் சிறந்த அந்தஸ்தும், பார்ப்பனர் பெற்றனர்—பெற்றும் வருகின்றனர் மேலும் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளனர். நோக்கம் மட்டும் என்று கூறுவது உண்மையாகாது—செயலளவில் அதனைக் காட்டியும் வருகின்றனர் என்பது தான் முழு உண்மையாகும்.

"இந்தச் சத்திரத்தில் உங்களுக்கு அறுசுவை உணவு பணம் பெறாமல் அளிக்கப்படும் சோற்றோடு மட்டும் அல்ல. பொற்காசுகள் கூட தட்சணையாகக் கொடுக்கப்படும். நடந்து வரவேண்டிய சிரமம் உங்களுக்குக் கிடையாது. நாங்கள் தூக்கிச் செல்லும் பல்லக்கிலே ஏறிக் கொண்டு வந்து உணவு அருந்தலாம்", என்று கூறி விருந்தும் தட்சணையும் கொடுத்து, பல்லக்கிலும் ஏற்றி அனுப்புகிறவனை, இந்த நல்ல ஏற்பாடு ஒரு நாள் மட்டுந்தான் என்று இல்லாமல், சந்திர சூரியர் உள்ளளவும் என்று பலமான ஏற்பாடு செய்திருப்பவனை, உண்டு களித்தவன், களித்துக் கொண்டு இருப்பவன், போற்றத்தானே செய்வான்—புகழத்தானே செய்வான்—அதற்கு ஆபத்து வரும் பொழுது காக்கத்தானே பாடுபடுவான்.

செந்நெல்லை பாடுபட்டுப் பயிரிட்டுத் தந்தவன்' உமிநீக்கி அரிசியாக்கித் தந்தவன், காய்கறியை உற்பத்தி செய்து கொடுத்தவன், திருத்தம் செய்து கொடுத்தவன், கட்டை வெட்டிக் கொடுத்தவன், அவ்வளவு பேரும் பசித்திருக்கும் நேரத்தில் அவர்களைப் பார்த்து, "அடிமைகளே! சோறு உங்களுக்கு இல்லை! வெட்டிச் சாய்த்து

விட்டீர்களோ வீணர்களே! இங்கே ஒரு பிடி சோறும் உங்களுக்கு இட முடியாது! சாகப்போகும் சடலமடா இது! சோறு போட்டுக் காப்பாற்றுவதா மண்ணாய்ப் போகும் கட்டையை? பசியைப் பொறுத்துக் கொள்ளுங்கள்! தியாகத்தின் மேன்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்! பொறுமையோடு போக மறுத்து அடம் பிடித்துக் கொண்டு இருப்பீர்களானால், அடித்து விரட்டுவேன்! தடி கொண்டு நையப் புடைப்பேன்; நற்பாடம் கற்பிப்பேன்!'' என்றெல்லாம் ஆர்பாட்டம் செய்பவனை, பாடுபட்டவர்கள், கோபிக்காமல் இருப்பாரா? கொதிக்காமல் இருப்பாரா? வாய்ப்பு நேர்ந்தால் அவனுக்கு நல்லபாடம் கற்பிக்காமல் இருப்பாரா ?

இந்தப் பொதுவிதியையும் கடந்து நிற்பது மனு தர்மம்—பிராம்மணீய ஏற்பாடு. இது கண்ணுக்குத் தெரியாத உருக்கிரும்புக் கோட்டை. கடவுள், தலைவிதி, மோட்ச நரகம், முன்ஜென்மப் பின்ஜென்மம் என்ற வன்மை மிக்க, காவலாளிகளால் காக்கப்படுவது! என்வேதான், இதனை உடைத்தெறிந்து, புதுநிலையை நாட்டில் தோற்றுவிப்பது என்பது, நினைத்ததும் நடந்து விடக்கூடிய இலகுவான காரியமாக இருக்கவில்லை.

இதன் தாக்குதல் வெளியிலிருந்து வருவது அல்ல; உடன் பிறந்தே கொல்லும் வியாதியைப் போன்றது. களத்திலே கலங்காத வீரனும், வர்ணாஸ்ரமத்தின் வாடை வீசின விநாடியிலேயே கைகால் நடுக்குறுகிறான்?



76020

ஆங்கிலேயர் நுழைந்தனர். ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்கும் கொக்குபோல வந்த ஆங்கிலேயர்களுக்கு, ஆரியம் வரவேற்பு கூறியது. கண்ணும் கருத்தும் நல்ல நிலையில் இருந்தவர்கள் அவர்கள்தானே? ஊரின் தன்மையை ஊமையிடமா கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும்? விழிப்பாக இருந்தவர்கள் வெள்ளையரோடு உறவாடி, வெள்ளையர் ஆட்சியால் விளைந்த நன்மைகள் பலவற்றையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர்.

அரசாங்க அலுவல் அகம் அனைத்தும் அந்தக் கூட்டத்தின் பாசறையாக மாறிவிட்டது. சில ஆண்டுகளுக்குள் அவர்கள் கூறிய 'அறிவுரை'யின் படியே ஆங்கிலேயர்களும் ஆட்சி நடத்தி வந்தனர். இதற்கான ஆதாரங்கள் பல உண்டு வரலாற்றுச் சுவடியிலே. காந்தியாரைக் கைது செய்ய மந்திராலோசனை கூறியவர் காலம் சென்ற மகாகனம் சீனிவாச சாஸ்திரியார்தான் என்பதை எப்படி மறந்துவிட முடியும்? காசிராஜனையும் ராஜகோபாலனையும் தூக்கிலிட வேண்டுமெனத் திறமையாக வாதிடவில்லை அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் என்று வாதிட முடியுமா? தேசிய உணர்ச்சியோ எகாதிபத்திய மோகமோ இது?

ஆங்கிலேயனுக்கு இருந்த மனிதப் பண்பு, கிரிமினல் குற்றத்துக்காக ஜாதி வித்தியாசம் காட்டி, குலத்துக்கொரு நீதி போதித்த மனுவை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. ஆனால் சிவில் சட்டமான 'இந்து லா' மட்டும்

மனு, மாந்தாதா, பராசர், யாக்ஞய வல்கியர் போன்ற ஆரிய சிரேஷ்டர்கள் வகுத்த வழியை ஏற்றுக் கொண்டது. இந்திய புதிய அரசியல் சட்டத்துக்கு, இன்று நடை முறையில் உள்ள 'இந்து லா' பலவகையில் முரண்பாடு உடையதாகும். எனவேதான் திருத்தம் செய்யும் முயற்சி இருந்து வருகிறது.

வருணாஸ்ரம பொறியில் சிக்குண்டு, படிப்பு வராத இனம் என்று மனமாற நம்பி, நொந்த வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த சமுதாயம், கல்வி ஞானம் இல்லாமல், கடைத்தேற மார்க்க மில்லாமல், வாழ்க்கையின் சுவையை ருசி பார்க்க வேண்டுமே என்ற கவலை இல்லாமல், பிறப்பதும்—உயிரோடு இருப்பதும்—காலம் வந்தால் மறிப்பதுமாகக் காலங் கழித்துக் கொண்டு வந்தது.

படிக்க வேண்டுமென்ற எண்ணத்தை பாராள வேண்டு மென்ற நினைப்பை, வாழவேண்டும் என்ற விருப்பத்தை, பல நூற்றாண்டுகளாகவே மறந்து கிடக்கிற சமுதாயத்திடம் தோற்றுவிப்பது என்பது கனவிலும் நினைக்க முடியாத காரியமாகும்.

நம்பிக்கை, அதிலும் மூட நம்பிக்கை, கட்குடியிலும் காமத்திலும், அதிகமாக மயக்கம் தரக் கூடியது. கொடு நஞ்சான அபின் மருந்திலும் ஆபத்தானது மூட நம்பிக்கை ஆரியம் பூட்டிய அறிவு அடிமைத்தனங்களை ஆங்கில அடிமைத்தனம், அறுத்தெறிய வேண்டா வெறுப்பாக முனைந்தது. கால வேகம் இதற்குத் துணை செய்தது.

ஆரிய மயக்கம் சிறிதளவு தெளிய ஆரம்பித்தது கல்வி நீரோடையின் காட்சியைக்காண, படிப்புவராத இனத்தில் குறைந்த அளவு எண்ணிக்கையினர், நீரோடை அருகில் சென்றனர்; நிலைமை கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவுபட ஆரம்பித்தது. ஆரிய இருளால் சூழ்ந்து கிடந்த தமிழ் வானத்தில் ஆங்கிலக் கல்வி என்னும் விடி வெள்ளி தோன்றலாயிற்று.

வேதம் விதித்த ஆசாரங்களை விண்ணிலே பறக்க விட்டனர் வேத வித்துக்கள். வடமொழி ஆங்கிலத்துக்கு இடம் கொடுத்து விட்டது. வேதங்களைப் பாராயணம் செய்த வாய் ஆங்கிலத்தை ஆர்வத்தோடு பாராயணம் செய்ய முனைந்து விட்டது. வால்மீகியை மனனம் செய்து கொண்டிருந்தவர்கள் ஓமரை ஸ்மரிக்க ஆரம்பித்தனர். சாகுந்தலம் கற்பதை விட்டு ஷேக்ஸ்பியரும் ஷெல்லியும் கற்க முற்பட்டனர்.

ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை சேவித்து வந்தவர்கள் வெள்ளைக்கலெக்டர் துரையைச் சேவிக்கத் தலைப்பட்டனர். பிரம்மாவையும் ருத்திரனையும் தோத்தரித்து வந்தவர்கள் கவர்னர் துரையையும் வைசிராய் பெருமானையும் வலம் வர ஆரம்பித்து விட்டனர்.

உச்சிக் குடுமி இருந்த சிரசில், அத்துடன் கிராப்பும் இடம் பெற்றது. பஞ்சகச்சம் 'டிரவுசரா'ல் மறைக்கப்பட்டது. பிறந்த மேனி சொக்காயால் மூடப்பட்டது. மாட்சிமை பொருந்திய மன்னர் பிரான் சர்க்கார் ஒழுங்காக நடைபெற ஆரம்பித்தது.

காயத்திரி மறந்து போய்விட்டது, நாலு ஆஸ்ரமமும் நிலை குலைந்து போய் விட்டது. வேள்விப் புகை இல்லை வேத கோஷம் இல்லை. எல்லாம் தொலைந்தது. காலத்துக்கேற்ற கோலம் பூணும் நாடகம் தான் நிலைத்து நின்றது.

உருவத்திலே மாற்றம்—தொழிலிலே தலை கீழ் புரட்சி—வாழ்க்கையிலே திருத்தம்—இவ்வளவு மாறின பின்னரும், உள்ளம் அப்படியே இருந்தது. உள்ளத்திலே மனு மறைந்திருந்தார்; நால் வருண ஆசார ஆபாசம் புகுந்திருந்தது; தான் உயர்ந்தவன்; மற்றவன் தாழ்ந்தவன்—அடிமை என்ற ஆணவம் நிரம்பி இருந்தது!

அதே ஆபாசமான அடிப்படையின் மீது, நாகரிகமான கட்டிடம் கட்டப்பட்டு விட்டது.

ஆங்கிலப் போர்வையில் ஆரியம் வட்டமிட்டு வந்தது. ஆரியத்தின் அஸ்திவாரம் ஆட்டம் கொடுக்கத் தொடங்கியபோதிலும், ஆரிய ஆபாசக் கோட்பாடு, ஆங்கில அதிகாரத்துடன் முடிந்தவரையில் ஆட்சி செய்தது. சனாதனம் ஜனநாயகப் பூச்சுடன் ஜொலிக்க ஆரம்பித்தது.

புதிய ஆபத்தை அகற்ற நமது தலைவர்கள் திட்டமிட்டனர். ஆரியத்தின் எதிர்ப்பு ஒரு பக்கம், நம்மவர்களின் ஆரிய மயக்கத்தால் எழுந்த ஆபத்து மற்றோர் பக்கம். பலவித இன்னல்களுக்குப் பிறகு நாட்டாட்சிப்

பொறுப்பில் நம்மவர்கள் அமர்ந்தனர். ஆரிய ஆதிபத்தியத்தை அழிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அரசாங்க அலுவல் அகங்களிலே அமர்ந்த நம்மவர்களிலே ஆள் கிடைப்பதில்லை. அதற்கான காரணத்தை ஆராய்ந்தனர். எல்லாவிதக் கல்லூரிகளிலும் நம்மவர் ஆள் அதிகமாக சேர்க்கப்பட்டால்தான், அந்தப் பிரச்னையை ஓரளவிற்காவது சரிக்கட்ட முடியுமென்ற முடிவிற்கு வந்தனர். அதன் விளைவுதான் கம்யூனல் ஜி. ஓ. என்னும் சமூக நீதி முறை.

மனு மாந்தாதாபோல் மனிதப் பண்பை இழந்திருக்கவில்லை நம்மவர்கள். நம்மை இழித்துப் பழித்துப் பேசி, இந்து சமுதாயத்தின் கோடியிலே ஒதுக்கித் தள்ளி, முன்னேற முடியாமல் அழுத்தி வைத்திருந்த சமூகத்தை, பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று நம்மவர்கள் எண்ணி இருந்தால்கூட, அது குற்றமுடையது என்று பார்ப்பன சமூகமே கூட கூறத் துணியாது.

நம்மவர்கள் இளகிய மனதோடு நடந்து கொண்டனர். செயலிலே கண்ணியம் இருக்கப் பார்த்துக் கொண்டனர். நடுநீதி வழங்குவது என்ற முடிவிற்கு வந்தனர். பார்ப்பனர்களையும் தம் போன்ற மனிதக் கூட்டத்தினரே என்ற உயர்ந்த நினைப்பு கொண்டனர்.

அடிமை என்று பார்ப்பனர்களை, நம்மவர்கள் கனவிலும் கருதவில்லை. 'சூத்திரர்' என்ற பட்டத்தை அவர்களுக்குச் சூட்டவில்லை. படிக்காதே, பார்க்காதே,

தொடாதே, தீண்டாதே, கிட்டே நெருங்காதே என்று ஆணை பிறப்பிக்கவில்லை.

பின் என்ன செய்தார்கள்? பார்ப்பனர்கள் உள்பட அனைவரையும் ஒன்றாக மதிப்பிட்டார்கள். பார்ப்பனர்கள் எண்ணிக்கைக் கேற்ப - ஏன், அதற்குக் கூடுதலாகக் கூட, பள்ளிகளிலேஇடம் கொடுக்க ஏற்பாடுசெய்தார்கள்.இது பேத புத்தியாம்! பிளவு படுத்தும் சிறுமைக் குணமாம்! ஜனநாயகக் கோட்பாடிற்கு இது முரண்பட்டதாம்!

மக்கள் கூட்டத்தை, ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் போல் பாவிக்காமல், பிளவுபடுத்தி, பிறப்பினாலேயே பேதப்படுத்தி, சமூகத்தைச் சீரழித்தவர்கள், மக்களை அவமதித்து மாபாதகம் புரிந்தவர்கள் இன்றுள்ள பார்ப்பனர்களின் முன்னோர்கள்தான். அவர்கள் வழிவந்தவர்களாக இவர்கள் இல்லாவிட்டால், மனுவைப் போற்றவும், மக்களை அவமதிக்கவும், வருணாஸ்ரமத்தை வாழ்த்தவும், சமத்துவத்தைத் தூற்றவும், இன்றுள்ள அல்லாடியார் முதல் ஆலமரத்துப் பிள்ளையார் கோயில் அர்ச்சகன் வரையில், சல்லடம் கட்டிக் கொண்டு கிளம்பக் காரணம் என்ன? விளக்கம் கூறவேண்டும் அந்தக் கூட்டம் இதற்கு! கூறுமா?

தென்னாட்டைப் பொருத்த வரையில், கம்யூனல் ஜி. ஓ. திராவிட சமுதாயத்தின்—ஏன்—பார்ப்பனர் உள்பட மனித சமுதாயத்தின் சுதந்தர சாசனம் ஆகும்.

பார்ப்பான், தன்னை மற்றவர்களிலும் உயர்ந்தவன்' உடம்பால் உழைக்காமல் வாழப் பிறந்தவன், பிறர்

உழைப்பிலே காலங் கழிக்கும் கடமை உடையவன், மற்ற வர்கள் எல்லாம் தாழ்ந்தவர்கள், அடிமை வேலை செய்து வாழ வேண்டியவர்கள் என்ற ஆணவத்தை—ஜாதித் திமிரை தொலைத்துத் தலை முழுக முன் வரவேண்டும் தயார் தானா?

வெள்ளையரோடு கைகுலுக்கி, விருந்துண்டு, பால் வித்தியாசம் இல்லாமல் பழகி, பலப்பல ஒழுக்கங்கெட்ட, காரியங்களைச் செய்து, நாகரிக வாழ்க்கையை நடத்தி னாலும், பார்ப்பனனின் விழியும் மொழியும், சுய ஜாதி யின் பாதுகாப்புக்குத்தானே பயன் படுகிறது? இந்தப் பாழ்பட்ட நிலத்தில் சமுத்துவமும், மக்களாட்சிக் கோட் பாடும், மனித நீதியும் தோன்றாதே — தோன்றினாலும் நிலைத்து நிற்காதே—நிலைத்தாலும் நீடித்து நிற்காதே!

* * * *

புதிய அரசியல் திட்டம் தீட்டப்பட்டாய்விட்டது மக்களாட்சி முறைப்படி அல்ல, அத் திட்டம் தீட்டுவதற் கான குழு அமைந்தது. புதிய அரசியல் திட்டம், நேர் மையானது என்று ஏற்றுக் கொண்டுள்ள, வயது வந் தோர் அனைவரின் வாக்குரிமையாலும், தேர்ந்தெடுக்கப் பட்டதல்ல அரசியல் ஆக்க மன்றம். காங்கிரஸ் மேலிடத் தின் கட்டளைப்படி, ஆங்கிலேயர் அளித்த அரசியல் உரிமையின் பலனாக உருவாக்கப்பட்டதுதான் அரசியல் ஆக்க மன்றம். மக்களாட்சி முறை அல்ல இது என எத் தனையோ அறிஞர்கள், எவ்வளவோ முறை இடித்திடித் துக் கூறியாகிவிட்டது.

இந்திய அரசியல் சட்டம் வேதாந்தத்தின் சாரமாம்—அரசியல் வழக்கறிஞர்கள் தீட்டியதாம்—காந்திய அடிப்படையில் அமைத்ததாம்! இப்படி எல்லாம் கூறுகிறார்கள், அல்லாடியின் ஆதரவாளர்கள்.

நடைமுறையில் பார்க்கிறோம்—பார்ப்பதென்ன? அனுபவிக்கிறோம்—நமது இனத்தின் எதிர்காகல வாழ்வு இருள் சூழ்ந்தது—மறுபடியும் மனுவின் காலத்துக்கு ஜனநாயக முலாம்பூச்சில், சஞ்சரிக்கப்போவதை?

* * * *

கம்யூனல் ஜி. ஓ. ஒரு மானிட சுதந்தர சாசனம். வாழ்க்கையில் சுகந்தரும் சாதனங்களை எல்லாம், 'இந்து' மதத்தின் 'உயர்' பிரிவினரான பார்ப்பனர்களே தமதாக்கிக் கொண்டு, அதே 'இந்து' மதத்தைச் சேர்ந்த மற்ற வகுப்பினரை அதன் அருகில்கூட வர முடியாத வகையில் வேலி அமைத்துக்கொண்டு, அதைப்பற்றிச் சிந்திக்கக்கூட விடாமல், சிந்திப்பது கூட பாபமென்று, கடவுள் சாஸ்திரமென்ற பெயரால் அறிவையும் உணர்ச்சியையும் மழுங்கச் செய்துவிட்டு, அந்த அக்கிரமக் கோட்பாடு பெரிய அளவில் இன்னும் நடைமுறையில் ஆதிக்கம் செய்து கொண்டு இருப்பது கண்டும், இந்த அடிப்படையைத் தகர்த்து மக்களாட்சி முறைக்குப் பாதை வகுத்துத் தரும் பண்புடைய கம்யூனல் ஜி.ஓ. வை, 'இதோ அரசியல் திட்டம்—ஜனநாயகக் கோட்பாட்டோடு கூடியது. தனி மனிதர் உரிமைகளைப் பாதுகாத்துத் தரும் விதிகள் கொண்டது—இதற்கு கம்யூனல் ஜி. ஓ. முரண்பாடா

னது'—என்று வாதிட்டு வெற்றிபெறுவது, வருணாஸ்ரம வக்கரபுத்தியின் வஞ்சக விளைவே அன்றி, புதிய அரசியல் சட்டம் புகுத்த நினைக்கும் மக்களாட்சிக் கோட்பாடாகாது.

புதிய இந்திய அரசியல் சட்டம் காண விரும்பும் இந்தியப் பிரஜை—குடிமகன்—இன்னமும் நாட்டில் தோன்றவில்லை. தன்னை ஒரு இந்தியன் என்று, இங்குள்ள ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்ளும் மனவளம் அல்லாடியார் போன்ருருக்கும் தோன்றவில்லை என்பது வெள்ளிடைமலை.

அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, சர்மா, முதலியார், ரெட்டியார், பிள்ளை, நாயுடு, நாய்க்கர் என்ற ஜாதியக் கண்களோடுதான், எந்த விஷயத்தையும் நோக்குகிறார்கள். வீட்டிலும் நாட்டிலும் இதே நோக்குத்தான். நீதி மன்றத்திலும் சட்ட புத்தகத்திலும் தான் 'இந்தியன்' என்ற ஏற்பாடும், 'தனி மனிதன்' என்ற தத்துவமும் ஒவ்வொருவர் மீதும் வலுக் கட்டாயமாகத் திணிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அல்லாடியார் உள்பட அனைவரும், ஜாதீய உணர்ச்சியை ஒழித்து, 'இந்தியா' என்ற நோக்கும், அதற்கான போக்கும் கொள்ளுகிற வரையில், புதிய அரசியல் கோட்பாட்டின்படி, பிரஜா உரிமை பாதுகாப்புக் கேட்பது, மனித தர்மத்துக்கு அப்பாற்பட்டதாகும்.

'இந்தியன்' அல்ல அல்லாடியார். அதற்கு இன்னும் தன்னைத் தகுதியுடையவராக ஆக்கிக்கொள்ளவில்லை

அவர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யராகத்தான் அவ இன்னும் இருந்து வருகிறார். 'நான் உயர்வு, நீ மட்டம்' என்ற ஜாதித் திமிரை அகத்தும் புறத்தும் விளையாட விட்டிருக்கிறவர்களை இந்திய அரசியல் சட்டம், தனக்குச் சொந்தமான குடி மக்கள் என்று ஏற்றுக்கொள்ள வில்லை.

ஆதலால், ஜாதி வெறி கொண்டவர்கள் அதனைத் தொலைத்து தலைமுழுகாத முன்னரே, அரசியல் சட்டத்தின் துணையை நாடுவது, 'இந்தியன்' என்ற சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக, இன்று இருந்து வரும் ஜாதிய பாகுபாட்டை என்றென்றும் நீடிக்கவே செய்ய உதவும்.

கல்வி பரவினால் தான், இந்து சமூகத்தின் பின்னணியில் கிடக்கிற பார்ப்பனரல்லாதார் அனைவரும் கல்வி பெற ஏற்பாடு செய்யப் பட்டால்தான், ஜாதி நினைப்பு மாறும்—அதன் விளைவான குறுகிய போக்கும் மறையும். அப்பொழுதுதான், இந்திய அரசியல் சட்டம் எதிர் பார்க்கும் ஜாதி நீங்கிய 'இந்தியன்' இந்த நாட்டில் இருப்பதைக் காணக்கூடும்.

தென்னாட்டைப் பொருத்தவரையில் கம்யூனியல் ஜி. ஓ. அதற்கான சூழ் நிலையை அமைத்துத்தரும், ஒரு அரிய சாதனமாகும். அதனை, ஜாதிய வெறிகொண்டவர்களின் தனிநபர் உரிமைக்குக் கேடு சூழ்கிறது என்று காரணம் காட்டிச் செல்லுபடியற்றதாக ஆக்கிவிட்டால், இன்னும் எத்தனை நூறு ஆண்டுகள் கழிந்தாலும், மனி

தப் பண்போடு கூடியவர்களைக் காண முடியாது; அதற்கு மாருக ஜாதி வெறியோடு கூடியவர்களைத்தான் காண முடியும். இந்திய அரசியல் சட்டம் தோற்றுவிக்க நினைக்கும் மனிதனை உற்பத்தி செய்யும் பேராற்றல் கம்யூனல் ஜி. ஓ. வுக்கு இருப்பதால், அது, இந்திய அரசியல் சட்டம் இந்நாட்டில் கால் கொள்வதற்குத் துணை நிற்கக் கூடியதேயன்றி, அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டைத் தகர்க்கக் கூடியதன்று. எனவே, முரண்பாடு சட்டத்தில் இல்லை; அவரவர்களின் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் ஜாதிய கேட்டில் தான் இருக்கிறது.

சுகம் அவர்களுக்கு—துக்கம் நம்மவர்களுக்கு; இன்பம் அவர்களுக்கு—துன்பம் நம்மவர்களுக்கு; உல்லாசம் அவர்களுக்கு—உபத்திரவம் நம்மவர்களுக்கு; உழைப்பின் பலன் அவர்களுக்கு—உழைப்பு நம்மவர்களுக்கு; உரிமை அவர்களுக்கு—கடமை நம்மவர்களுக்கு; கற்பது அவர்கள்—கட்டை வெட்டுவது நாம்; அதிகாரம் செய்வது அவர்கள்—ஏவல் செய்வது நாம்; நிழலிலே அவர்கள்—வெய்யிலிலே நாம்; நெற்கதிர் பக்கத்திலே அவர்கள்—சேற்றுக்கழனியிலே நாம்; மாளிகையிலே அவர்கள்—மேற் கூரையில்லா மண் குடிசையிலே நாம்; என்பன போன்ற கேவல வாழ்க்கை முறையை, மனுவின் அக்கிரம மார்க்கத்தை, ஆட்டங் கொடுக்கச் செய்தது கம்யூனல் ஜி. ஓ. என்னும் சமூக நீதி முறைதான்.

கம்யூனல் ஜி. ஓ. வெளி வாழ்க்கையில் மட்டும் நம் மவர்களுக்குச் சிற்சில நன்மைகளைக் கொடுத்து விட்டிருப்பதாக மட்டுமே கொள்ள வேண்டாம். மன நிலையிலும் புரட்சிகரமான கருத்துகளைக் கொடுத்திருக்கிறது என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். நம்மவர்களிலே சிலர் படித்துப் பட்டம் பெற்றிருப்பதும்—பெறுவதும், சிலர் சர்க்கார் உத்தியோகங்களிலே அமர்ந்திருப்பதும்—அமருவதும் மட்டுமே நமது கண்களுக்குப் படுகிறது. வெறுங்காட்சி அளவோடு அது நின்று விடவில்லை. மறக்க முடியாததும், மறுத்துரைக்க முடியாததும், ஈடும் எடும்பும் இல்லாததுமான, ஒரு உண்மையை நிலைநாட்டி இருக்கிறது என்பதை, நம்மில் பலர் உணரவில்லை. அதாவது பார்ப்பன இனத்துக்கே படிப்பு வரும், நம்மவர்க்கு வராது; பார்ப்பன இனத்துக்கே தகுதி, திறமை உண்டு; நம்மவர்க்குக் கிடையாது; என்ற பித்தலாட்டமான சித்தாந்தத்தைச் சுக்கு நூறாக்கி, நல்ல வாய்ப்பு அளிக்கப் பட்டால் நம்மவரும் எவருக்கும், எதிலும் பின்னடைந்தவர்களாக இருக்க மாட்டார்கள் என்ற பேர் உண்மையை நிலை நாட்டி இருப்பதாகும்.

இதன் பலனைப் பிராம்மணீய ஏற்பாடு மணல்மேடு சரிவதுபோல் சரியவும், சனாதனத்தின் அஸ்திவாரம் ஆட்டங் கொடுக்கவும், அது இருந்த இடத்தில் ஜனநாயகக் கோட்பாடு முளைக்கவுமான புதிய நிலை—வரவேற்கத் தகுந்த நல்ல நிலை ஏற்பட்டு இருக்கிறது.

சனாதன தொத்துநோயை கருவறுக்கும் சக்தியுடையது கம்யூனல் ஜி. ஓ. ஒன்றுதான். அதற்கு, விடுதலை—சுதந்தர முனைப்பு இருக்கிறது. ஒரு சிறு கூட்டத்தினரே அனுபவித்து வந்த உரிமைகளை, அந்தக் கூட்டத்தைப் பழி வாங்கவேண்டும் என்ற தீய எண்ணம் துளியுமில்லாமல், அனைவருக்கும் பொதுவாக்க வேண்டுமென்ற உரிமைக் கோட்பாடு கம்யூனல் ஜி. ஓ. வாக உருவெடுத்து இருக்கிறது என்று கூறுவதுகூட மிகையாகாது தன்னை மட்டும் உயர்த்திக்கொண்டு மற்றவர்களைத் தாழ்த்த வேண்டும் என்ற வஞ்சகக் கோட்பாடு கம்யூனல் ஜி. ஓ. வில் இல்லை.

பேதமல்ல — சமரசம், பிளவல்ல — ஒற்றுமை அடிமை அல்ல—உரிமை, உயர்வுதாழ்வல்ல—சமத்துவம்—போதிக்கும் உயர் பண்புகள் கொண்டது கம்யூனல் ஜி. ஓ.

மனு ஏற்பாடு நிரந்தரமானது—நிலையானது—பிறப்பிலேயே பார்ப்பனர் நீங்கலாக மற்றவர்கள் அடிமைகள் என்று கட்டாயப் படுத்துவது.

கம்யூனல் ஜி. ஓ. நிரந்தரமானது அல்ல, தற்காலிகம்; இடைக்கால ஏற்பாடு. அனைவருக்கும் உரிமையைப் பொதுவாக்கி இருப்பது. அனைவருக்கும் சம சந்தர்ப்பத்தைக் கொடுப்பது. மக்களாட்சிப் பண்பின் அடிப்படையில் உருவானது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகாக மனுவின்பிடியில் சிக்கிக் கிடந்தவர்கள், தங்களுடைய நிலைமை உணர்ந்து

கொள்வதுகூட, இன்னமும் கஷ்டமாக இருக்கிறது. அந்தக் காலத்திலும் சரி, இந்தக் காலத்திலும் சரி, எந்தக் காலத்திலும் சரி, அந்தச் சுரண்டல் இயந்திரத்திற்கு அவசியமே இருந்ததில்லை. அவசியமில்லாத ஒன்றை, அதனால் ஆதிக்கமும் வாழ்வும் பெற்றவர்களும் பெற்றுக் கொண்டு இருக்கிறவர்களும், அதனை கைவிட மறுக்கிறார்கள் என்றால், அதில் பொருள் உண்டு. ஆனால், அதனால் பாழ்பட்டவர்கள், அடிமையாகக் கிடக்கிறவர்கள் கூட, அதனை, உதறித் தள்ள முன்வராமல் இருப்பது வேதனை தரும் விசித்திரம்தான். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, அதன் கொடுமையை அனுபவித்து வருகிறவர்கள், ஆத்திரம் காட்டவில்லை, அந்தக் கூடாத கோட்பாட்டை அழிக்க.

அவர்கள் காணட்டும், அவர்களுக்குக் கண்ணும் கருத்தும் கெடாமல் இருந்தால், ஏதோ ஒரு சிறு அளவில் தங்கள் இனத்தின் முன்னேற்றம் குறிப்பிட்ட ஒரு துறையில் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்துக்காக. கம்யூனல் ஜி. ஓ. ஒழிப்புக்கு, பாடுபட்டதையும்-கிளர்ச்சி செய்ததையும்—முடிவில் வெற்றிபெற்று மகிழ்வதையும்.

கம்யூனல் ஜி. ஓ. வின் அடிப்படை இலட்சியம் இன்னும் முழுஅளவில் நிறைவேறிவிடவில்லை. அதன் விடுதலை, பண்பாடு இன்னும் பட்டுப்போகவில்லை--பசுந்தளிர் போன்ற நிலையில்தான் இருக்கிறது. இன்னும் சிறிது காலத்திற்குகம்யூனில் ஜி. ஓ. விற்கு அவசியமும், தேவையும் இருக்கிறது. மக்களாட்சி முறைக்குத் தேவைப்படு

வதுஅய்யரும், அய்யங்காரும், முதலியாரும் நாய்க்கரும் அல்ல,—மக்கள்—மக்கள். அந்த மக்களை உண்டாக்கு வதுதான் கம்யூனல் ஜி. ஓ.—சமூக நீதிமுறை.

அந்தக்காலம்பிராம்மணீயக்கோட்பாடுநடைமுறையில் இருந்த காலம். அயோத்தி இராமன் அரசாண்டகாலம். வசிஷ்டர் அறிவுரைப்படி அரசன் நீதி வழங்கியகாலம்.

சமூகத்தை விட்டுப் பிரித்துத் தனி மனிதனை மதிப் பிட்டுப் பார்க்காத நிலை அன்று. தனி மனிதனுக்குத் தனி உரிமை என்ற ஏற்பாடு இல்லை. சூத்திர சமூகம் தவம் செய்யக்கூடாது. சம்பூகன் சூத்திரன்—தவம் செய் தது குற்றம். தண்டனை தரப்படுகிறது, மனு முறைப் படி—சக்கரவர்த்தி இராமனுல்.

இன்று மக்களாட்சிக் கோட்பாடுபற்றிப் பேசப் படுகிற காலம். மனு கோட்பாட்டைப் பகிரங்கமாக நடை முறைக்குக் கொண்டுவர வேண்டுமெனப் பேச முடியாத காலம். சமூகம் சமூகமாகப் பேதப்படுத்திப் பார்ப்பது கண்டிக்கப்படும் காலம்.

எனவே, சனுதனப் பேச்சு மறைந்து ஜனநாயகப் பேச்சு கிளம்புகிறது. சமூக உயர்வு தாழ்வு பேசும் நிலையை மாற்றிக் கொண்டு, தனிமனித உரிமை என்ற கூக்குரல் கிளப்பப்படுகிறது. தனிமனித உரிமைக்குச் சட் டப்படி பாதுகாப்பும் செய்து கொண்டாகி விட்டது.

சமூகத்தின் பெயர்கூறி, மனுவின் சட்டத்தைக் காட்டி, சம்பூகன் தலை துண்டிக்கப்பட்டது அன்று!



TINNEVELLI

தனிமனிதனின் உரிமைபேச, இந்திய அரசியல் சட்டத்தைத் துணைக்கழைத்து, சமூகத்தின் பின்னணியில் இருக்கும், சம்பூகர்களின்—தலையை அல்ல—எதிர்கால வாழ்வு துண்டிக்கப்படுகிறது இன்று!

ஜனநாயக கோலத்தில் சனுதனம்! மக்களாட்சி முக மூடியில் பிராம்மணீயம்!

## பார்ப்பனச் சேரியா ?
## அரசாங்க அலுவலகமா ?

### இஞ்ஜினீயர் இலாக்கா

சர்க்கார் வெளியிட்ட சிவில் லிஸ்ட்படி சீப் இன்ஜினியர்கள் 3 பேர். 3 பேரும் பார்ப்பனர்களே.

| தோழர்கள். | சம்பளம் |
|---|---|
| 1. ஏ. ஆர். வெங்கடாச்சாரியார் | ரூ. 3,000 |
| 2. எம். எஸ். திருமலை அய்யங்கார் | ரூ. 2,750 |
| 3. டி. எஸ். வெங்கடராம அய்யர் | ரூ. 2,750 |

### சூப்ரண்டிங் இஞ்ஜினியர் இலாக்கா

இதில் "இந்துக்கள்" 9 பேர். இந்த 9 பேரும் பார்ப்பனர்களே!

| | |
|---|---|
| 1. என். பத்மநாப அய்யர் | ரூ. 2,150 |
| 2. ஆனந்த ராவ் | ரூ. 2,150 |

3. கே. வி. ஏகாம்பரம் ரூ. 2,050
4. வே. ப. கிருஷ்ண மூர்த்தி ரூ. 2,050
5. வி. பி. ஜோகய்யா ரூ. 2,050
6. ஆர். நாராயணசாமி அய்யர் ரூ. 2,050
7. யு. எஸ். ராமசுந்தரம் ரூ. 1,350
8. ஏ. ஆர். வெங்கட்ராமன் ரூ. 1,125
9. கே. கோபால அய்யங்கார் ரூ. 1,125

இவர்களுக்குக் கீழ் வேலை செய்யும் திராவிட கீழ் ஆபீசர்கள் உருப்படி ஆகி முன்னுக்கு வரமுடியுமா ?

## எக்ஸிகியூட்டிவ் இஞ்ஜினியர் இலாக்கா

இதில் "இந்துக்கள்" 45 பேர். இதில் 33 பேர் பார்ப்பனர்.

1. கே. வி. சோமநாதன்
2. சீனிவாச ஆச்சாரி
3. வி. அருணசலம்
4. நாராயண காமத்
5. லட்சுமண அய்யர்
6. ரங்கநாத தாத்தாச்சாரி
7. இ. வி. நாராயணன்
8. எம். டி. நரசிம்மாச்சாரி
9. டி. ராஜகோபாலன்
10. எஸ். சுந்தரராஜன்
11. பி. எஸ். நடராஜன்
12. ஹரிஹர அய்யர்

13. எஸ். என். சீனிவாச ராவ்
14. டி. எஸ். பத்மநாப அய்யர்
15. சி. வி. எஸ். நரசிம்மராவ்
16. எஸ். பாலசுப்பிரமணியன்
17. ஆர். வெங்கட்டராமன்
18. எம். சுப்பாராவ்
19. எஸ். ராமசாமி
20. எம். வெங்கட்டராமன்
21. எம். அனந்தையா
22. கே. ஆர். ராஜகோபாலன்
23. ஏ. வெங்கட்டராமன்
24. கே. லட்சுமண ராவ்
25. பி. வெங்கட்டராம அய்யர்
26. ஆர். சிவசுப்ரமண்யம்
27. எஸ். ராஜகோபாலன்
28. அனுமந்த ராவ்
29. நாராயண ராவ்
30. கே. வி. ராமகிருஷ்ணன்
31. டி. ராமச்சந்திரன்
32. பி. ஏ. கிருஷ்ணமூர்த்தி
33. எம். எஸ். பாலசுப்ரமணியம்

நிரந்தர தொடக்க அசிஸ்ட்டெண்ட்

இதில் மொத்த இந்துக்கள் 231 பேர்.

இதில், பார்ப்பனர்கள் :—145 பேர்.

திராவிடர்கள் :—86 பேர்.

### தற்காலிக அசிஸ்டெண்ட் இஞ்ஜினியர்

| | |
|---|---|
| மொத்த இந்துக்கள் | - 141 பேர். |
| இதில், பார்ப்பனர் :— | 90 பேர். |
| திராவிடர் :— | 51 பேர். |

---

## மின்சார இலாக்கா

ரூ. 500-ம் 500-க்கு மேற்பட்ட 3000 ரூபாய் வரை சம்பளமும்

| | | | |
|---|---|---|---|
| மொத்த இந்துக்கள் | ... | 33 | பேர்கள் |
| இதில், பிராமணர்கள் | ... | 26 | ,, |
| திராவிடர்கள் | ... | 7 | ,, |
| ரூ. 250 முதல் 750 வரைசம்பளம். | | | |
| மொத்த இந்துக்கள் | ... | 27 | ,, |
| இதில், பிராமணர்கள் | ... | 21 | ,, |
| திராவிடர்கள் | ... | 6 | ,, |

### மின்சார இலாகா புரோபஷனர்

| | | | |
|---|---|---|---|
| மொத்த இந்துக்கள் | .... | 102 | பேர்கள் |
| இதில், பிராமணர்கள் | ... | 66 | ,, |
| திராவிடர்கள் | .... | 36 | ,, |

### எலக்டரிக் சிப் கன்ஸ்ட்ரக்டிவ் இன்ஜினியர்கள்

எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி ... 1700 ரூ. சம்பளம்.

## மேற்படி சூப்ரண்டிங் இஞ்ஜினியர்கள்

| | | | |
|---|---|---|---|
| ஏ. வெங்கடேஸ்வரர் | ... | 1100 ரூ. | சம்பளம். |
| ஜி. வெங்கட்டராமன் | ... | 1200 ரூ. | ,, |
| பி. நடேசய்யர் | ... | 1200 ரூ. | ,, |

## எக்ஸிகியூட்டிவ் இஞ்ஜினியர்கள்

ரூ. 500 முதல் 850 வரை.

| | | | |
|---|---|---|---|
| மொத்த இந்துக்கள் | ... | 15 | பேர்கள் |
| இதில், பிராமணர்கள் | ... | 10 | ,, |
| திராவிடர்கள் | .... | 5 | ,, |

## அசிஸ்டெண்ட் இஞ்ஜினியர்கள்

| | | | |
|---|---|---|---|
| மொத்த இந்துக்கள் | .... | 45 | பேர்கள் |
| இதில், பார்ப்பனர்கள் | ... | 24 | ,, |
| திராவிடர்கள் | ... | 21 | ,, |

## மெக்கானிக்கல் இஞ்ஜினியர் இலாக்கா

நிர்வாக இஞ்ஜினீயர் ரூ. 500 முதல் 850 வரை.

எச். ஏ. காடியார்—பார்ப்பனர்.

அசிஸ்டெண்ட் இஞ்ஜினீயர் 7 பேர்கள்.

7 பேரும் பார்ப்பனர்களே !

## எரேக்ஷன் கன்ஸ்ட்ரெக்ஷன்

ரூ. 260 முதல் 500 வரை சம்பளம்.

| | | |
|---|---|---|
| மொத்த இந்துக்கள் | .... | 14 பேர்கள் |
| அதில், பிராமணர்கள் | ... | 11 ,, |
| திராவிடர்கள் | ... | 3 ,, |

## சீப் கண்ட்ரோலர்

சம்பளம் ரூ. 750.

மொத்த 'இந்துக்கள்' 2 பேர்கள்.

2 பேரும் பார்ப்பனர்களே !

1. சூரியநாராயணமூர்த்தி. 2. என். வி. நாராயணசாமி.

## சீப் அக்கவுண்டெண்ட்

கேசவ அய்யர் ரூ. 810 சம்பளம் !

## ஸ்டோர் அக்கவுண்ட்

சி. ஏ. கோபால அய்யங்கார் ரூ. 500. சம்பளம்

## அக்கவுண்டென்ஸ்

பிராமணர்கள் 5 பேர்கள்.

## டிப்டி சீப் அக்கவுண்ட்

| | | |
|---|---|---|
| மொத்த இந்துக்கள் | ... | 7 பேர்கள் |
| இதில், பிராம்மணர்கள் | ... | 5 ,, |
| திராவிடர்கள் | ... | 2 ,, |

## ஆபீஸ் சீப் அக்கவுண்ட்

மொத்த 'இந்துக்கள்' 2 பேர்கள்

2 பேரும் பார்ப்பனர்களே.

## சீப் இன்ஜினியர் பெர்சனல் அசிஸ்டெண்ட்

| | | |
|---|---|---|
| என். வெங்கட்ராமன் | ... | பிராமணர் |
| ஆடிட் ஆபீசர்-1 | .... | பிராமணர் |
| ராமய்யா அய்யர் | ... | பிராமணர் |

# திராவிடர் இருந்த இருப்பு

## நீதி இலாக்கா

| | பார்ப்பனர் | திராவிடர் |
|---|---|---|
| மாதம் 300 ரூ. முதல் 5000 ரூ. வரையில் உள்ள உத்தியோகங்களில் | 609 | 405 |
| 100 முதல் 300 வரை | 3667 | 2519 |
| 35 முதல் 100 வரை | 9183 | 8179 |
| 35-க்கு கீழ்பட்ட கீழ்த்பிர உத்தியோகம் | 1513 | 52517 |

இன்று 1940 முதல் 50 வரை 10 வருஷம் கழிந்த பின்பு—பார்ப்பனரும் நாமும் சற்றேறக் குறைய சரிசமம் தான் ஆகி இருக்கலாம். அதுவும்மேல் உத்தியோகங்களில் இஞ்ஜினீர் இலாக்காவில், வைத்திய இலாகாவில், நீதி, மின்சார முதலிய இலாக்காவில் பார்ப்பனர் 100-க்கு 75, 80, 90 வீதம் அமர்ந்திருக்கிறார்கள்.

உதாரணமாக, 1950 ஜனவரியில் சர்க்கார் பிரசுரித்த உத்தியோக விவர பட்டியல்படி :—

ஐகோர்ட் ஜட்ஜுகளில் இந்துக்கள் 12 பேர்கள்.' இதில் பார்ப்பனர் 7 பேர்கள்; திராவிடர் 5 பேர்கள் தான்.

ஹைகோர்ட் ரெஜிஸ்ட்டார் முதலிய பெரிய உத்தியோகம் இந்துக்கள் 8-ல்,

பார்ப்பனர் 5 திராவிடர் 3

அபிஷியல் அசைனி உத்யோகம் 2-ல் இரண்டு பேரும் பார்ப்பனர்களே.

லா ஆபீசர்கள் இந்துக்கள் 10ல்,

பார்ப்பனர் 6 திராவிடர் 4

சிட்டி சிவில் கோர்ட் ஜர்ஜுகள் மொத்தம் 2 உத்தியோகங்களில்

2-ம் பார்ப்பனர்களே.

சிட்டி ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜுகளில் இந்துக்கள் 2-ல்,

பார்ப்பனர் 1 திராவிடர் 1

ஜில்லா ஜட்ஜுகள் இந்துக்கள் 20-ல்,

பார்ப்பனர் 14 திராவிடர் 6 தான்.

சப்ஜட்ஜுகள் காயமானவர்களில் இந்துக்கள் 33-ல்.

பார்ப்பனர் 22 திராவிடர் 11

சப் ஜட்ஜுகள் ஆக்டிங்கு இந்துக்கள் பதவி 45-ல்.

பார்ப்பனர் 20 திராவிடர் 25

இதில் திராவிடர் 5 அதிகத்துக்கு காரணம் சமூக நீதி ஜி. ஓ. வை இதில் சிறிது நாளாக அமுலாக்குவதால் தான். அதுவும் அவர்கள் ஜனவிகிதப்படி $1\frac{1}{4}$ பெற வேண்டியதற்கு 20 பெற்று இருக்கிறார்கள்.

முனிசீப்புகள் நிரந்தரம் இந்துக்கள் பதவி 86-ல்

| | | |
|---|---|---|
| பார்ப்பனர் | 34 | இந்தப் பேதம் சமூக நீதி ஜி. ஓ. |
| திராவிடர் | 52 | இதில் பயன் படுத்தியதால். |

அப்படி இருந்தாலும் பார்ப்பனர் எண்ணிக்கைப்படி 86-க்கு 3 பதவிதான் உண்டு. கம்யூனல் ஜி. ஓ. படி பார்ப்பனருக்கு 12 பதவிதான் உண்டு.

தற்காலிக முனிசீப்புகளில் இந்துக்கள் பதவி 63-ல்

| | | |
|---|---|---|
| பார்ப்பனர் | 21 | இந்தப் பேதமும் கம்யூனல் ஜி. ஓ. |
| திராவிடர் | 42 | 'அனுசரிப்பதால்' ஏற்பட்டதாகும்' |

மேற்கண்ட புள்ளி விவரம் நீதி இலாக்காவில் உள்ள புள்ளிகளாகும்.

## நிர்வாக இலாக்கா

இனி நிர்வாக இலாக்காவை பற்றிய புள்ளி விவரமாவது:- நிர்வாகத்தில் தலைமைப் பதவி I. C. S. பதவி ஆகும். அதில் இந்துக்கள் பதவி 62-ல்,

பார்ப்பனர் 45 திராவிடர் 17

இந்த 17-ல் மலையாள திராவிடர் 11 போக, தமிழ் ஆந்திரர் 6 தான். இந்த 6-லும் ஒருவர் சிலோன்காரர்; மீதி 5 தான்.

ஆகவே I. C. S. என்கிற சர்வ அதிகாரம் உள்ள பதவிகளில் பார்ப்பனர் இன்றும் 100-க்கு 75-க்கு மேல் பெற்று இருக்கிறார்கள்.

(மற்ற விபரம் பின்னால் வரும்) இந்தப்படி அவர்கள் அனுபவித்துக் கொண்டு நாம் பெற்று இருக்கும் ஒரு சில பதவிகள் "வகுப்பு துவேஷத்தின் மீது" பெற்றதாகப் பத்திரிகை மூலம் கோர்ட்டு மூலம் புகார் கூறுகிறார்கள்.

1939-க்கு முன், இந்து ஹைகோர்ட் ஜட்ஜு பதவி 6-ல்,

பார்ப்பனர் 5 திராவிடர் 1

இந்து ஜில்லா ஜட்ஜுகள் 23-ல்

பார்ப்பனர் 20 திராவிடர் 3

இந்து சப்-ஜட்ஜுகள் 39-ல்,

பார்ப்பனர் 28 திராவிடர் 11

இந்து சப்-ஜட்ஜுகள் 15-ல்,

பார்ப்பனர் 12-ல் திராவிடர் 3

இந்து ஜில்லா முனிசீப்புகள் 123-ல்,

பார்ப்பனர் 74 திராவிடர் 49 வீதம் இருந்திருக்கிறது.

# காந்திஜிக்கு அல்லாடி கோஷ்டி துரோகம்

தோழர் எஸ். எஸ். மாரிசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டுள்ள தமிழ் வார இதழான 'காண்டிபம்', கம்யூனல் ஜி. ஓ. இந்திய அரசியல் சட்ட விதிக்கு முரணானது என்று சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பைக் கண்டு, 4-8-50-ல் நீண்டதோர் கட்டுரை தீட்டியுள்ளது. அது ஒரு தேசிய ஏடு. அக்கட்டுரையில் காணப்படும் சில முக்கிய பகுதிகளை அப்படியே தருகிறோம்.

மொத்த ஸ்தானங்களை 14 என்று வைத்துக்கொண்டால் :

**கம்யூனல் ஜி. ஓ.**

| | ஸ்தானங்கள் பெறுகிறார்கள் |
|---|---|
| பிராமணரல்லாதார் | 6 |
| பின்னணி பிராமணரல்லாதார் | 2 |
| பிராமணர் | 2 |
| ஹரிஜனங்கள் | 2 |
| முஸ்லிம்கள் | 1 |
| இ. கிருஸ்துவரும் ஆங்கிலோ இந்தியரும் | 1 |

இதுதான் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத்தின்படி பள்ளிக்கூட ஸ்தானங்களை ஒதுக்கும் விதி.

70 சதவிகிதத்துக்கு 6+2 ஸ்தானங்கள் தான் என்னும்போது இரண்டே முக்காலுக்கும் குறைவாக உள்ளவர்களுக்கு 2 ஸ்தானங்கள் தருவது குறைவு என்ருல் இதை முட்டாள் கூட ஏற்க மாட்டான்.

அதேபோல 16.3 சத விகிதம் இருக்கும் ஹரிஜனங்களுக்கும், பிராமணர்களுக்கும் ஒரே விகிதத்தில் 2 ஸ்தானங்கள் ஒதுக்கப்படுகின்றன என்ருல் இது அநியாயமென்பதை சாதாரண ஆட்கள் கூட ஒப்புக் கொள்ளுவார்கள். 2.7 சத விகிதத்துக்கு 2 ஸ்தானங்கள் என்ருல் 16.3 சத விகிதத்தினருக்கு 16 ஸ்தானங்கள் அல்லவா தர வேண்டும்?

## திடுக்கிடக் காரணம்

வழக்கு விசாரணையையும், குறுக்குக் கேள்விகளையும் பார்த்தபொழுது தீர்ப்பு இப்படித் தானிருக்குமென பொதுவாக எதிர்பார்க்கப் பட்டது. எனவே தீர்ப்பு நம்மை ஆச்சரியத்தில் வைக்கவில்லை. ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும்தான் நம்மை திடுக்கிட வைக்கிறது. மகாத்மா உயிரோடு இருக்கும்வரை ஹரிஜனங்கள், தாழ்த்தப் பட்டவர்கள், ஒடுக்கப் பட்டவர்கள் என்றெல்லாம் கூறி வந்தவர்கள் இப்போது அந்த ஒடுக்கப்பட்டவரை இன்னும் ஒடுக்க முயற்சி செய்து வெற்றியும் பெற்றுவிட்டார்களே என்பதுதான் நாம் திடுக்கிடக் காரணம்.

## தகுதிப் பேச்சு

தகுதி என்ற முறையில் பரீட்சை நடந்தால் ஹரிஜனப் பிள்ளைகளும் பின்னணி பிராமணரல்லாதவர்களும் நிச்சயமாக வெற்றிபெற மாட்டார்கள். அப்படியானால் பிராமணரல்லாதவர்களும், ஹரிஜனங்களும் தகுதியற்றவர்களென்று அர்த்தமில்லை. சூழ்நிலையும், சந்தர்ப்ப வசதிகளும்தான் இப்போது தகுதிகளாக இருக்கின்றன.

தகுதியை மட்டும் யோக்கியதையாக வைத்து பரீட்சை நடந்தால் வசதி பெற்றவர்கள்தான் முன்னேற முடியும். டிப்டி கலெக்டர் பிள்ளைதான் சாதாரணர்களுக்காகவாவது வரமுடியுமென்ற நிலை இத்தேசத்தில் இருக்கிறது.

## நீடித்த வரலாறு

ஏற்கெனவே சமூக ஏணியில் மேல்படியில் உள்ளவர்கள்தான் உயர உயரப் போய்க் கொண்டிருக்கிறார்கள். பின்னணியில் உள்ளவர்கள் என்னதான் முயன்றாலும் போக முடியவில்லை. இந்தியாவின் சரித்திரத்தை நெடுகப் புரட்டிப் பார்த்தால் இந்த அவக்கேடு அனாதிகாலம் தொட்டு இருந்து வருகிறது என்பது தெளிவாகத் தெரியும். முகலாயர் ஆட்சியில் முகலாயர்தான் முன்னேறினார்கள். பீஷ்வாக்கள் காலத்தில் பீஷ்வாக்கள்தான் முன்னேறினார்கள் என்று சரித்திரம் கூறுகிறது.

## மறுக்க முடியாத உண்மை

இதே மாதிரி தான் இந்த 20-ம் நூற்றுண்டிலும் நடந்து வருகிறது. உதாரணமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அமுலுக்கு வரும் முன்னுல் ஒரு தாலுகா ஆபிஸில் ஒரு அய்யரோ, அய்யங்காரோ, பிள்ளையோ, முதலியாரோ, நாயுடுவோ, அல்லது வேறு யாருமோ பதவியில் இருந்தால் அவர்கள் தத்தம் வகுப்பாருக்குத் தான் பதவிகளை வழங்கி வந்தார்கள். இதில் பிராமணர் பிராமணரல்லாதார் என்ற வித்தியாசமே இல்லை. வேண்டுமானுல் ஒரு வகுப்பார் இதில் அதிக தீவிரமாக இருக்கலாம். இன்னொரு ஜாதிக்காரர் சற்று தீவிரம் மட்டுப்பட்டு இருக்கலாம். இந்த ஜாதியப் பற்று இல்லாமலிருந்தவர்கள் ரொம்ப அரிது. அப்படி அரிதாக இருந்தவர்கள் அநேகமாக மேல் பதவிகளுக்கு வராமலிருந்தார்கள். அப்படியே வந்தாலும் குடத்துக்குள் வைத்த விளக்குபோல இருந்தனர்.

## அப்பி இருந்தார்கள்

ஹிந்துக்களை மட்டும் தனியாகப் பிரித்து அதோடு பிராமணரை சத விகிதம் போட்டுப் பார்த்தால் 3.8 சத விகிதம் ஆகிறது. அதாவது 100 பேரில் 4 பேர் கூட பிராமணர் இல்லை. இந்தக் குறுகிய தொகையினர்தான் 30 ஆண்டுகளுக்கு முன்னுல் உயர்நீதி மன்றத்திலிருந்து சகல சர்க்கார் கட்டிடங்களிலும் அப்பியிருந்தார்கள். இதைக்கண்டு மற்ற வகுப்பார் கொதிப்படைந்திருந்தார்கள்.

## படிப்பினை

மெஜாரிட்டி வகுப்பின் கொதிப்புக்கு உள்ளான எந்த மைனாரிட்டி வகுப்பும் சுகமாக வாழமுடியாது. ஜெர்மனியில் யூதர்மீது எவ்வளவு வெறுப்பு இருந்ததோ அதே மாதிரி இங்கும் பிராமணர்மீது வெறுப்பு வளர்ந்து வந்தது, அதிர்ஷ்டவசமாக இந்த வெறுப்பு ஜெர்மனியில் பலாத்காரத்தில் இறங்கியது போல இங்கு இறங்கவில்லை. இப்படி இறங்காதபடி காத்தது வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவ உத்தரவு தான்.

## மூண்ட தீ

ஆரம்பத்தில் இந்த உத்தரவு வருவதற்கு முன்னால் தேசத்தில் எந்த மாதிரி நிலைமை இருந்தது என்பதை நண்பர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். சைமன் கமிஷன் வந்த சமயம் சென்னையில் பிராமண சகோதரர்கள் தாக்குண்டதற்கு புறக்காரணங்கள் என்னவாக இருந்தாலும் அடிப்படைக் காரணம் ஜாதி வித்யாசம் தான் பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற துவேஷம். இந்தக் காலித்தனத்துக்கு வித்திட்டது. இந்தது வேஷம் வளராதபடி தென்னாட்டுத் தலைவர்கள் காத்தார்கள் வகுப்பு வெறியைத் தூண்டி விட்டு அரசியல் ஆதிக்கம் பெற அலைந்தவர்களை அடக்கியதும், தேர்தலில் புறமுதுகிடச் செய்ததும் தமிழ் நாட்டு பிராமணரல்லாத தலைவர்கள் தான்.

## இது குறைவாம்

கடந்த ஆண்டில் இஞ்சினியரிங், வைத்தியக் கல்லூரிகளில் கீழ்க் கண்டவாறு ஸ்தானங்கள் பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கின்றன :

| | சத விகிதம் |
|---|---|
| பிராமணர் | 20 |
| பிராமணரல்லாதார் | 58 |
| கிறிஸ்துவர், ஆ. இந்தியர் | 8 |
| முஸ்லிம் | 7 |
| ஹரிஜனங்கள் | 7 |

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமைப்படி ஹரிஜனங்களுக்கு இன்னும் அதிகமான சத விகிதம் கிடைத்திருக்க வேண்டும். அதற்கு தோதாக ஹரிஜன மாணவர்கள் இல்லை யாதலால், காலி ஸ்தானங்களைப் பெரும்பாலும் பிராமணப் பிள்ளைகளுக்கே தந்திருக்கிறார்கள். இப்படி செய்ததால் தான் 20 சதவிகிதம் பிராமணர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதைத்தான் குறைவு என்று சர் அல்லாடி சொல்லுகிறார்—ஸ்ரீனிவாச அய்யங்கார் கர்ஜிக்கிறார். 'ஹிந்து, மித்திரன்' போன்ற பிராமணப் பத்திரிகைகள் இதற்கு பக்கமேளம் கொட்டுகின்றன.

## கல்லூரிகளில்

புராட்டஸ்டன்ட் கிறிஸ்துவர் நடத்தும் 'கிறிஸ்டியன் 'காலேஜில்' 1849—50 ல் இண்டர்மிடியட் வகுப்புக்கு 88பிராமணர்சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜனத்தொகையில் 70 சதவிகிதம் பேர் இருக்கும் பிராமணரல்லாதாரோ 87 இடங்களைத்தான் பிடித்திருக்கிறார்கள். இரண்டு வகுப்புக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றே ஒன்றுதான் !

ஜேஸூட் மிஷன்காரர்கள் நடத்தும் " லயோலா காலேஜில் " அதே வகுப்புக்கு பிராமணர் 201 பேரும் பிராமணரல்லாதார் 174 பேரும் அனுமதி பெற்றிருக்கிறார்கள் இந்த வித்தியாசத்தையும் சர். அல்லாடிகளுக்கு சமர்ப்பிக்கிறோம்.

பிரஸிடென்ஸி காலேஜில் பி. ஏ. வகுப்புக்கு பிராமணர் 16-ஸ்தானங்களையும் பிராமணரல்லாதார் 38 ம் பெற்றிருக்கிறார்கள். இது சர்க்காரே நிர்வகிக்கும் காலேஜ் என்பது கவனிக்கத்தக்கது.

சாதாரண படிப்பு படிக்கும் இந்த காலேஜ்களில் தான் நிலைமை இப்படி என்றில்லை. மெடிகல் காலேஜிலும் இஞ்சினியரிங் காலேஜ்களிலும் இது தான் நிலைமை.

1947-ல் மொத்த மெடிகல் காலேஜ்களில் பிராமணர் 24.4 சதவிகிதமும் பிராமணரல்லாதார் 45.8 சதவிகிதமும் பெற்றிருக்கிறார்கள்.

இதே வருஷம் இஞ்ஜினியரிங் காலேஜ்களில் பிராமணர் 25 சதவிகிதமும் பிராமணரல்லாதார் 49.4 சதவிகிதமும் பெற்றிருக்கிறார்கள்.

1949—50 லும் இஞ்ஜினீயரிங் காலேஜ்களில் பிராமணர் இடம் பெற்ற சதவிகிதம் 20.5 பிராமண ரல்லாதார் 35.4 சத விகிதம்தான்.

## இருவர் தேசியம்

மூன்ருவதாக காட்டப் போகும் உதாரணம் தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்தரவின் அவசியத்தைத் தெளிவாக விளக்கி வைப்பதாகும் சென்னையில் உள்ள "விவேகானந்தா காலேஜ்" அனைவருக்கும் தெரியும். இதை நடத்துகிறவர்கள் பிராமணர்கள். இதில் 1949—50 ம் வருஷத்துக்கு இண்டர்மிடியட் வகுப்புக்கு 268 பிராமணப் பிள்ளைகளும் 30 பிராமணரல்லாத "சூத்திரப்பிள்ளைகளும்" அனுமதிக்கப்பட்டிருக்கிருர்கள்.

விவேகானந்தா கல்லூரிக்குப் போட்டியாக நடத்தப்படுவதாகக் கூறப்படும் (ஆனால் நாம் நம்ப வில்லை) பச்சையப்பன் காலேஜில் 172 பிராமணர்களுக்கும் 828 பிராமணல்லாதாருக்கும் ஸ்தானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

## மகத்தான துரோகம்

இன்றைய ஹைகோர்ட் தீர்ப்பால் மகாத்மா கண்ணெனக் காத்திருந்த ஹரிஜனப் பிள்ளைகள் பள்ளிக் கூடங்களுக்குள் நுழைய முடியாது என்று ஏற்படுகிறது. மகாத்மாவை தேசத்தின் பிதாவென்றும் தந்தையென்றும் வாய்க் கூசாமல் அழைக்கும் பக்தர்களே இந்த துரோகத்தைச் செய்கிருர்களென்ருல் வேறென்ன வேண்டும்?

100க்கு 97 பேர் இருக்கும் தேச மக்கள் கல்வி அறிவின்றி வாழ 3 சதவிகிதப் பேர் ஆதிக்க வெறியோடு அலைந்தால் எந்தக் குடியரசு தான் குடியரசாக இருக்க முடியும்?

ஜார் காலத்தில் படித்தவர் பாமரரைக் கசக்கிப் பிழிந்த நிலை, இந்தியாவிலும் குறிப்பாக தென்னிந்தியாவிலும் ஏற்படாது என்பது என்ன நிச்சயம்?

## நீர் மேல் எழுத்து

ஜாதி, சமயமற்ற சர்க்கார் ஏற்பட்டிருக்கும் இந்நாளில் ஒரு ஜாதியார் மட்டும் உயர வரவும்; மற்றவர் அவர்களது காலடிப் புழுவெனக் கிடக்கவும் இருந்தால் நாட்டின் முன்னேற்றத்தை ஓடும் தண்ணீரில்தான் எழுதவேண்டும்.

## பரிகாரம்

வகுப்புகளின் ஜனத்தொகையின்படி அவரவர்களுக்குப் பள்ளிக்கூட இடங்களைப் பிடித்துத் தருவதாக இருக்கவேண்டும். இதற்காக அரசியலமைப்பைத் திருத்த வேண்டுமென்றால் திருத்தித்தான் ஆகவேண்டும். இதற்கான நடவடிக்கைகளுக்கு சென்னை சர்க்காரும் பொது மக்களும் தயாராகவே இருக்க வேண்டும். இப்படிச் செய்யாதிருக்கும் வரை தென்னிந்தியா, ஜார் காலத்து ரஷ்யா மாதிரியும், ஔரங்கசீப் காலத்து தர்பார் மண்டபம் மாதிரியாகவும் தானிருக்கும். இப்படி ஏற்படுவது மகாத்மாவின் நெறிக்கும், இந்தியக் குடியரசு லட்சியத்

துக்கும் நேர்விரோதமானவை என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.

## அத்திப் பூ

வழக்கு விசாரணையின் போது தாழ்த்தப்பட்டவர்களே ஏன் முன்னேறிக்கொண்டு வரக்கூடாது என்று நீதிபதிகள் சார்பில் கேட்கப்பட்டது. இன்டர்மிடியட் டோ. பி. எஸ்ஸியோ படிக்கும் பின்னணி சமூகத்தினர் இன்னும் சற்று முன்னேறி 'தகுதி' யோடு போட்டியிடவாமல்லவா என்று நீதிபதி விசுவநாத சாஸ்திரிகள் பின்னிப் பின்னிக் கேட்டார். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த டாக்டர் அம்பேத்காரை உதாரணத்துக்குக் கூட காட்டினார்.

எட்டுகோடிப் பேர் இருக்கும் தாழ்த்தப்பட்டவர் வகுப்பில் மாதிரிக்காக ஒரு அம்பேத்காரைத்தான் பார்க்க முடிகிறது. ஆனால் 1, 308,000 இருக்கும் பிராமணர்களிலோ எத்தனை விசுவநாத சாஸ்திரிகளையும், அல்லாடிகளையும், ஸ்ரீனிவாச அய்யங்கார்களையும், பார்க்க முடிகிறது? இதற்கு கனம் நீதிபதி தீர்ப்பில் பதிலில்லை.

தாழ்த்தப்பட்டவர்களைக் கைதூக்கி விடாமலே அம்பேத்கார்கள் உற்பத்தியாவார்களென நினைப்பது முடவன் கொம்பு தேனுக்கு ஆசைப்பட்டது போலத்தான்.

# பொய்க் கூக்குரலை விளக்கும் புள்ளி விவரம்

தோழர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டுள்ள 'தினசரி' இதழ் 31-7-50-ல் எழுதியுள்ளதின் சுருக்கம்

பிராமணர்கள் என்பதற்காக சென்னை சர்க்கார் அச்சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு மேல் படிப்புக்கான வசதியைக்கூட அளிக்க மறுக்கிறது என்பது கூக்குரல். இதுபற்றி ஓயாது பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது. இதே காரணத்தைக் காட்டி சர்க்காரின் வகுப்பு வாரி விகிதாசார உத்தரவை ஆட்சேபித்து சமீபத்தில் வழக்கும் தொடரப்பட்டது. ஹைகோர்ட்டும், ஜாதிமத இன அடிப்படையில் காலேஜ்களில் அட்மிஷன் செய்வது இந்திய குடியரசு அரசியல் 15 (1), 29 (2) ஆகிய ஷரத்துகளுக்கு பொருத்தமல்ல என்று தீர்ப்பளித்தது

வகுப்புவாரி விகிதாசார உத்தரவு அரசியல் ஷரத்துக்கு பொருந்தாததாக இருக்கலாம். ஆனால் வகுப்பு விகிதாசார உத்தரவு பிராமணருக்கு காலேஜ்களில் கதவடைத்து விட்டதா? பிராமண வாலிபர்களுக்குப் படிப்பு வசதி மறுக்கப் படுகிறது என்பது உண்மையா? இம் மாகாண ஜனத்தொகையில் 2.7 சதவிகிதத்தினராகவுள்ள பிராமணர் 40 சத விகித அட்மிஷன்களை கலேஜ் களில் பெறுகின்றனர். அதோடு சென்ற இரு வருஷங்களில் அட்மிஷன் பெறும் மாணவர் தொகையும் அதிகரித்து வருகிறது. இந்த உண்மையை இக் கட்டுரையில் கண்ட புள்ளி விவரங்கள் வெட்ட வெளிச்ச மாக்குகின்றன.

## சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை

(1941-ஆண்டு கணக்குப்படி)

| | ஆண் | பெண் | மொத்தம் | சத விகிதம் |
|---|---|---|---|---|
| இந்துக்கள் | 1,72,88,774 | 17,442,556 | 3,4731,330 | 70.4 |
| பார்ப்பனர் | 644,358 | 6,63,642 | 13,08,000 | 2.7 |
| பார்ப்பனரல்லாதார் | 1,66,44,416 | 1,67,78,914 | 3,34,23,330 | 67.7 |
| தாழ்த்தப்பட்டோர் | 40,23,098 | 40,45,394 | 80,68,492 | 16.3 |
| முஸ்லிம்கள் | 19,24,406 | 19,72,046 | 38,96,446 | 7.8 |
| இந்திய கிறிஸ்தவர் | 9,05,511 | 10,01,571 | 19,11,082 | 3.7 |
| ஆங்கிலேயர் ஆங்கிலோ இந்தியர் | 19,074 | 19,663 | 38,737 | 7 |
| புத்தர்கள் | 642 | 430 | 1,072 | |
| பார்ஸிகள் | 211 | 158 | 369 | 1.1 |
| மற்றவர்கள் | 3,01,428 | 2,99,849 | 6,01,277 | |
| மொத்த ஜனத்தொகை | 2,41,95,048 | 2,48,11,903 | 4,93,06,951 | |

இந்துக்களின் மொத்த தொகையில் பார்ப்பனர் 3.8 சத விகிதம்

## 1948-49-ல் இன்டர் மீடியட்டில் சேர்க்கப்பட்டோர்

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிருஸ்தவர் | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| **சர்க்கார் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 1806 | 2485 | 70 | 363 | 214 | |
| சேர்க்கப்பட்டோர் | 814 | 1368 | 66 | 245 | 128 | |
| **உதவி பெறும் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 5599 | 8509 | 280 | 574 | 2586 | |
| சேர்க்கப்பட்டோர் | 3219 | 4383 | 280 | 389 | 1291 | |
| மொத்தம் சேர்ந்தவர்கள் | 4033 | 5751 | 346 | 634 | 1419 | 12183 |
| மொத்தம் சேர்ந்தவர்களில் ஒவ்வொரு சமூகத்தினரின் சத விகித விவரம் | 33.2 | 47.2 | 2.8 | 5.2 | 11.6 | |

## 1949-50 இன்டர் மீடியட்

| | பிராமணர் | பிராமணர் அல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| **சர்க்கார் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 1531 | 2132 | 44 | 247 | 193 | |
| சேர்க்கப்பட்டோர் | 661 | 1250 | 39 | 152 | 105 | |

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| **உதவி பெறும் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 5821 | 7349 | 240 | 518 | 2252 | |
| சேர்க்கப்பட்டோர் | 3761 | 5292 | 238 | 378 | 1241 | |
| மொத்தம் சேர்க்கப்பட்டோர் | 4422 | 6542 | 277 | 530 | 1346 | 13117 |
| சதவிகிதம் | 33.8 | 49.7 | 2.1 | 4.1 | 10.8 | |

**1948-49-ல் பி. ஏ; பி. காமில் சேர்ந்தோர்**

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| **சர்க்கார் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 351 | 420 | 3 | 50 | 71 | |
| சேர்க்கப்பட்டோர் | 199 | 295 | 2 | 41 | 36 | |
| **உதவி பெறும் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 1676 | 1936 | 55 | 97 | 687 | |
| சேர்க்கப்பட்டோர் | 912 | 932 | 55 | 65 | 406 | |
| மொத்தம் சேர்க்கப்பட்டோர் | 1111 | 1227 | 57 | 106 | 412 | 2948 |
| சத விகிதம் | 27.8 | 41.6 | 1.9 | 3.6 | 15.1 | |

## 1949—50-ல் பி. ஏ.; பி. காமில் சேர்ந்தோர்

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **சர்க்கார் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 284 | 452 | 9 | 39 | 50 | |
| சேர்க்கப்பட்டோர் | 204 | 337 | 8 | 31 | 45 | |
| **உதவி பெறும் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 1734 | 1663 | 78 | 171 | 502 | |
| சேர்க்கப்பட்டோர் | 1190 | 1663 | 40 | 117 | 365 | |
| மொத்தம் | 1394 | 1610 | 48 | 148 | 410 | 3610 |
| சேர்க்கப்பட்டோர் சதவிகிதம் | 38.6 | 44.6 | 1.3 | 4.1 | 11.4 | |

## 1948-49-ல் ஜூனியர் பி. எஸ். ஸி.

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **சர்க்கார் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 658 | 623 | 7 | 83 | 72 | |
| சேர்க்கப்பட்டோர் | 242 | 213 | 1 | 83 | 37 | |
| **உதவி பெறும் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 1158 | 929 | 9 | 33 | 366 | |
| சேர்க்கப்பட்டோர் | 502 | 309 | 9 | 6 | 119 | |
| மொத்தம் சேர்க்கப்பட்டோர் | 754 | 522 | 10 | 41 | 196 | 1523 |
| சதவிகித விவரம் | 49.5 | -34.2 | .7 | 2.7 | 12.9 | |

## 1949–50ல் ஜூனியர் பி. எஸ். ஸி.

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **சர்க்கார் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 715 | 616 | 10 | 89 | 101 | |
| சேர்க்கப்பட்டோர் | 278 | 289 | 2 | 39 | 32 | |
| **உதவி பெறும் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 1166 | 874 | 8 | 50 | 411 | |
| சேர்க்கப்பட்டோர் | 559 | 447 | 3 | 50 | 145 | |
| மொத்தம் சேர்க்கப்பட்டோர் | 837 | 686 | 5 | 89 | 177 | 1794 |
| சதவிகிதம் | 46.6 | 38.3 | 0.3 | 4.96 | 9.84 | |

## 1948-49-ல் பி. ஏ. (ஆனர்ஸ்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **சர்க்கார் காலேஜ்கள்** | | | | | |
| வந்த மனுக்கள் | 78 | 77 | 4 | 9 | 13 |
| சேர்க்கப்பட்டோர் | 49 | 36 | 3 | 3 | 7 |
| **உதவி பெறும் காலேஜ்கள்** | | | | | |
| வந்த மனுக்கள் | 481 | 4.8 | 2 | 27 | 163 |
| சேர்க்கப்பட்டோர் | 144 | 101 | 2 | 7 | 64 |

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸதவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மொத்தம் சேர்க்கப்பட்டோர் | 193 | 137 | 5 | 10 | 71 | 416 |
| சதவிகிதம் | 46.5 | 32.9 | 1.2 | 2.4 | 17.0 | |

## 1948-49-ல் பி. எஸ்ஸி; (ஆனர்ஸ்)

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸதவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **சர்க்கார் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 280 | 138 | ... | 9 | 28 | |
| சேர்க்கப்பட்டோர் | 17 | 17 | ... | 4 | 6 | |
| **உதவி பெறும் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 360 | 236 | ... | 7 | 65 | |
| சேர்க்கப்பட்டோர் | 42 | 9 | ... | ... | 12 | |
| மொத்தம் சேர்க்கப்பட்டோர் | 59 | 26 | ... | 4 | 18 | 107 |
| சத விகிதம் | 55 | 24.3 | ... | 3.8 | 16.9 | |

## 1949—50-ல் பி. ஏ.; (ஆனர்ஸ்) பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்)

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| **சர்க்கார் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 484 | 344 | 8 | 32 | 51 | |
| சேர்க்கப்பட்டோர் | 62 | 61 | 3 | 11 | 11 | |
| **உதவி பெறும் காலேஜ்கள்** | | | | | | |
| வந்த மனுக்கள் | 1188 | 763 | 6 | 38 | 295 | |
| சேர்க்கப்பட்டோர் | 256 | 145 | 2 | 6 | 99 | |
| மொத்தம் | | | | | | |
| சேர்க்கப்பட்டோர் | 318 | 206 | 5 | 17 | 110 | 656 |
| சதவிதம் | 48.5 | 31.4 | .7 | 2.6 | 16.8 | |

## சென்னை நகர காலேஜ்களில் நிலைமை

சென்னை நகரிலுள்ள சில முக்கியமான காலேஜ்களில் மாணவர்கள் வகுப்புவாரியாக எவ்விதம் இடம் பெற்றிருக்கின்றனர் என்ற விவரத்தை கீழே காணும் புள்ளி விவரங்கள் தெளிவாக்குகின்றன. இந்த புள்ளி விவரங்களை அறிய, வெவ்வேறு விதமான, நிர்வாகத்திற்குட்பட்ட சில காலேஜ்களே எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. பல சமூகங்களிலும் எந்தெந்த சமூகத்திற்கு எந்தெந்த நிர்வாகம் அதிக சலுகை அளித்திருக்கிறது என்பதை கீழ்வரும் புள்ளி விவரங்கள் வெ[illegible]ளிச்சமாக்கும்.

## 1949-50—ல் சேர்க்கப்பட்டோர் விவரம்

| காலேஜ் பெயர் | இன்டர் | பி. ஏ. பி. காம் | பி. எஸ். ஸி. | பி.ஏ. (ஆனர்ஸ்) | பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்) |
|---|---|---|---|---|---|
| **சென்னை கிறிஸ்டியன் காலேஜ்** (பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவ ஸ்தாபனம்) | | | | | |
| பிராமணர் | 88 | 15 | 45 | 29 | 8 |
| பிராமணரல்லாதார் | 87 | 38 | 48 | 25 | 5 |
| ஹரிஜன் | 7 | 3 | — | — | — |
| முஸ்லிம் | 9 | 1 | 1 | 2 | — |
| இந்திய கிறிஸ்தவர் | 65 | 17 | 31 | 15 | 3 |
| **பச்சையப்பன் காலேஜ்** (பெரும்பாலான பிராமணரல்லாத நிர்வாகம்) | | | | | |
| பிராமணர் | 172 | 41 | 69 | 28 | |
| பிராமணரல்லாதார் | 828 | 192 | 190 | 42 | |
| ஹரிஜன் | 19 | 2 | ... | 1 | |
| **லயோலா காலேஜ்** (ஜெஸூட் மிஷன் நிர்வாகம்) | | | | | |
| பிராமணர் | 201 | 105 | 71 | 38 | 5 |
| பிராமணரல்லாதார் | 174 | 74 | 28 | 14 | 2 |
| ஹரிஜன் | 11 | 2 | 1 | ... | ... |
| முஸ்லிம் | 15 | 11 | ... | 3 | ... |
| இந்திய கிறிஸ்தவர் | 114 | 25 | 24 | 16 | 5 |

**விவேகானந்தா காலேஜ்** (பெரும்பாலும் பிராமண நிர்வாகம்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிராமணர் | 268 | 111 | ... | 48 | 3 |
| பிராமணரல்லாதார் | 30 | 8 | .... | 1 | ... |
| ஹரிஜன் | 1 | .... | ... | ... | ... |
| முஸ்லிம் | 1 | .... | ... | ... | ... |
| இந்திய கிறிஸ்தவர் | 1 | .... | ... | ... | ... |

**பிரஸிடென்ஸி காலேஜ்** (சர்க்கார் நிர்வாகம்)

| | 1940-50-ல் இண்டர் எடுபட்டது | பி. ஏ. | பி. எஸ். ஸி |
|---|---|---|---|
| பிராமணர் | .... | 16 | 108 |
| பிராமணரல்லாதார் | ... | 38 | 112 |
| ஹரிஜன் | ... | 1 | ... |
| முஸ்லிம் | ... | 4 | 12 |
| இந்திய கிறிஸ்தவர் | .... | 10 | 17 |

## மெடிக்கல் இன்ஜினீயரிங் காலேஜ்கள்

தொழில் படிப்பு சம்பந்தமான கல்வி ஸ்தாபனங்களில் அதிகம் பேர் சேர ஆவல் கொள்ளும் காலேஜ்களில் இரண்டு மெடிக்கல் காலேஜும் இன்ஜினீயரிங் காலேஜும் தான். சர்க்கார் நிர்வாகத்தில் இம்மாகாணத்தில் 4 மெடிக்கல் காலேஜ்களும் 4 இன்ஜினீயரிங் காலேஜ்களும் இருக்கின்றன. இந்த காலேஜ்களில் 1947-ல் எந்தெந்த சமூக மாணவர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்ற விவரம் கீழே கொடுக்கப்படுகிறது.

## மெடிக்கல் காலேஜ்

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | ஆங். இந்தி. | மற்றோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆந்திரர் | 105 | 181 | 3 | 17 | 43 | 2 | ... | 351 |
| குண்டூர் | 128 | 25 | ... | 4 | 9 | .... | .... | 50 |
| சென்னை | 183 | 386 | 8 | 69 | 143 | 43 | 5 | 842 |
| ஸ்டான்லி | 12 | 224 | 8 | 2 | 97 | 19 | 2 | 515 |
| மதுரை | 14 | 11 | 8 | 8 | 7 | 2 | ... | .... |
| மொத்தம் | 442 | 827 | 27 | 140 | 299 | 66 | 7 | 50 |
| சதவிகிதம் | 24.4 | 45.8 | 1.5 | 2.7 | 16.8 | 8.8 | .4 | 1808 |

## இன்ஜினியரி

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | ஆங். இந்தி. | மற்றோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| இண்டி | 122 | 206 | 13 | 50 | 61 | 11 | 12 | 475 |
| கோயம்புத்தூர் | 36 | 95 | 2 | 11 | 14 | 2 | 2 | 162 |
| காகிநாடா | 28 | 63 | 3 | 7 | 4 | ... | ... | 105 |
| அனந்தபூர் | 12 | 25 | 1 | 7 | 3 | ... | .... | 50 |
| மொத்தம் | 198 | 389 | 19 | 75 | 82 | 13 | 14 | 792 |
| சத விகிதம் | 2.5 | 49.4 | 2.4 | 9.5 | 10.4 | 1.6 | 1.7 | |

## 1949-50-ல் இன்ஜினியரிங் காலேஜில் சேர்க்கப்பட்டோர் தொகை

| | பிராமணர் | பிராமணரல்லாதார் | ஹரிஜன் | முஸ்லிம் | கிறிஸ்தவர் | ஆங். இந்தி. | மற்றோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 72 | 124 | 82 | 27 | 25 | 25 | 21 | 351 |
| சத விகிதம் | 20.5 | 35.4 | 23.4 | 7.7 | 7.1 | .5 | | |

## இதில் எது அநியாயம்?

இப்பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து, சென்னை ராஜ்யத்தில் பல காலேஜ்களிலும் ஒவ்வொரு சமூகத்தையும் சேர்ந்த மாணவர்கள் எவ்வளவு பேருக்கு அட்மிஷன் கிடைத்திருக்கிறது என்பது நன்கு விளங்கும்.

1949-50 இண்டர் மிடியட் வகுப்புகளில் சேர்ந்த மொத்த மாணவர்கள் 13,117 பேரில் 4,432 பேர் பிராமண மாணவர்கள்.

பி. ஏ, பி. காம். வகுப்புகளில் சேர்க்கப்பட்ட மொத்த மாணவர்கள் 3610 பேரில் 1394 பேர் பிராமணர்.

காலேஜ்களில் பி. எஸ் ஸி, ஆனர்ஸ் வகுப்புகளில் படிக்கத்தான் அநேகம் மாணவர்கள் ஆவலுடன் வருகிறார்கள். ஆனால், இதில் எந்த சமூகத்திற்கு அதிக சலுகை கிடைத்திருக்கிறது? 1949-50-ல் பி. எஸ்.ஸி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் மொத்த மாணவர்கள் 1794 பேரில் 837 பேர் பிராமணர். பி. ஏ. ஆனர்ஸ் பி. எஸ்,ஸி ஆனர்ஸ் வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் மொத்த மாணவர்கள் 656 பேரில் 318 பேர் பிராமணர்.

## வர வர அதிகம்

போன இரண்டு வருஷங்களில் காலேஜ்களில் அட்மிஷன் செய்யப்பட்டிருப்போரின் தொகையை கவனித்தால் பிரா

மண மாணவர்களின் தொகை அதிகரித்தே வந்திருக்கிறது என்பதும் நன்கு விளங்கும்.

கீழே கண்ட புள்ளி விவரத்தைப் பாத்தால் நன்ருகப் புரியும்.

| | 1948-49 | 1949-50 |
|---|---|---|
| இன்டர்மீடியட் | 4033 | 4422 |
| பி. ஏ. பி. காம் | 1111 | 1394 |
| பி. எஸ். ஸி. | 754 | 837 |
| ஆனர்ஸ் | 252 | 318 |

### 3 சத விகிதத்திற்கு எத்தனை சத விகிதம்?

இம்மாகாணத்தின் மொத்த ஜனத் தொகையில் இரண்டே முக்கால் சத விகிதத்தினருக்கும் குறைவாகவே பிராமணர்களிருக்கிருர்கள். ஆனல் காலேஜ்களில் சேர்க்கப்படும் மொத்த பிராமணரில் இந்த 2.7 சதவிகித சமூகத்தினருக்கு எத்தனை சதவிகித ஸ்தாபனங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டுவதே கீழே இருக்கும் புள்ளி விவரம்.

1949-50ல்

| | |
|---|---|
| இன்டர்மீடியட் | 33.8 |
| பி. ஏ. பி. காம் | 38.6 |
| பி. எஸ் ஸி | 46.6 |
| ஆனர்ஸ் | 48.5 |

பிராமணர் என்பதற்காக பிராமண இளைஞர்களுக்கு படிக்கக்கூட வசதி மறுக்கப்படுகிறது என்று கூக்குரல்

போடுகிறார்கள் அல்லவா? இக்கூக்குரல் நியாயம் என்ப தற்கு ஏதாவது உண்மை உண்டா? இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைப் பார்க்கிற வர்கள் யாராவது பிராமணருக்கு வசதி மறுக்கப்படு கிறது என்று யோக்கியமாக சொல்ல முடியுமா?

மெடிகல் காலேஜ், இன்ஜினீரியங் காலேஜ்களில் பிராமணருக்கு இடம் மறுக்கப்படுகிறது என்றுதான் ரொம்ப ரொம்ப பலமாக கூக்குரல் போடுகிறார்கள். அந்த காலேஜ்களைப் பற்றிய புள்ளி விவரங்களை கவனித்தால் அவற்றிலுள்ள மொத்த இடங்களில் 25 சதவிகிதம் பிராமணருக்கு கொடுக்கப்படுகிறது என்பது நன்கு விளங்கும். இவ்விதம் பிராமணருக்கு ஒதுக்கி யளிக்கப் பட்டிருக்கும் இவ்வளவு ஸ்தானங்களில் பாதி கூட வேறு எந்த சமூகத்திற்கும் இல்லை என்பதும் கவனிக்கவேண்டியதாகும்.

கல்வித்துறையில் இந்திய கிறிஸ்தவர் சமூகம் முன் னேற்றமுள்ள சமூகம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இம்மாகாணத்தின் மொத்த ஜனத்தொகையில் 3.7, சத விகிதத்தினர் இந்திய கிறிஸ்தவர். ஆனால் பிராம ணர் 2.7 சத விகிதத்தினரே. எனினும் காலேஜ்களில் பிராமணருக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களில் மிகக் குறைவான ஸ்தானங்களையே இந்திய கிறிஸ்தவர் பெற்றிருக்கிறார்கள். மெடிகல் காலேஜ்களில் படிக்கும் மாணவர்களில் 16.6 சத விகிதத்தினரே கிறிஸ்தவர்கள். ஆனால் 24.4 சத விகித மாணவர்கள் பிராமணர்கள்.

இன்ஜினீயரிங் காலேஜ்களில் கிறிஸ்தவ மாணவர்கள் 10.4 சத விகிதத்தினரென்றால் பிராமணர் 25 சத விகிதத்தினர்.

காலேஜ்களில் மாணவர்களை சேர்க்கும் விஷயத்தில் வாஸ்தவத்தில் இப்பொழுது இருந்து வரும் நிலைமை என்ன என்பது மாத்திரமே இக் கட்டுரையில் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. தங்களுடைய ஜனத்தொகைக்கு அதிகமாக அதுவும் மிதமிஞ்சி பார் அனுபவிக்கிறார்கள் என்பதை வாசகர்களே யூகித்துக்கொள்ளலாம். இந்த உண்மை விவரங்களையெல்லாம் அறிந்த பிறகும்கூட, குறிப்பிட்ட ஒரு சமூகத்தினருக்கு படிக்கக்கூட உரிமை மறுக்கப்படுகிறது என்று யாராவது கூச்சல்போடுவார்களானால் அப்படிப் பட்டவர்களை ஒரே ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்றுதான் தோன்றும். "இந்த ராஜ்யத்தில் 97.3 சதவிகிதத்தினராக இருக்கும் மக்களுக்கு, அவர்களுடைய மேல் படிப்புக்கு இன்னும் எவ்வளவு குறைந்த இடம் அளித்தால் போதுமென்று நினைக்கிறீர்கள்? பிராமணர்களுக்கு மேல் படிப்பு வசதி மறுக்கப்படுகிறதென்று கூப்பாடு போடுபவர்களை இந்த ஏடுதான் இனிக் கேட்கவேண்டும்.



76022

# நன்றி

'வந்தது விபத்து'—இதில், நாட்டில் இதுகாறும் இருந்து வந்த சமூக நீதி சரிந்த விதம். அது காப்பாற்றப்பட வேண்டிய அவசியங்கள் ஆகியவை குறித்து அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம். ஏ., அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள்.

பழங் கதை ?—சமூக நீதி ஏற்படுவதற்கு முன் நாட்டில் நீதி இருந்த நிலைமை, அதனால் பார்ப்பனரல்லாதார் அடைந்த இன்னல்கள், அரசியல், கல்வி ஆகிய துறைகளில் ஆரியம் ஆட்சி செலுத்திய தன்மை, சமூக நீதி பிறந்த வரலாறு, அதன் பயனாக நாடு அடைந்த நற்பயன், உள மாற்றம், ஆகியவைகளை இனிய, எளிய, தமக்கே உரித்தான உணர்ச்சி மிக்க நடையில், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரன் அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

'வந்தது விபத்து !' என்ற கட்டுரையை வெளியிட அனுமதி தந்த அறிஞர் அண்ணாதுரை அவர்கட்கு எமது நன்றி.

தங்களுக்குச் சரி எனப்பட்ட கருத்தின்படி கோட்பாடுகளில் மாற்றங் கொண்டிருந்த போதிலும் தமிழர்க்கு திராவிடர்க்கு இடுக்கண் நேர்ந்த காலத்துத் துளியும் சுணக்கங் காட்டாமல் ஏற்பட்ட இன்னல்களைக் களைய முன்வந்த தோழர்கள் 'தினசரி' ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம், 'காண்டீபம்' ஆசிரியர் எஸ். எஸ். மாரிசாமி ஆகியோர்க்கும் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

பதிப்பகத்தார்.